விலை: 50.00
பக்கங்கள் : 16
website : www.valampurii.lk
viber : 076 636 3378
Registered as a Newspaper in Srilanka




# வலம்புரி

Valampurii
E-mail: valampurii@yahoo.com
சங்கு 26
ஒலி 036 வள்ளுவர் ஆண்டு 2056 தை 11 வெள்ளிக்கிழமை (24.01.2025) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829

## யாழ்.இந்து ஆரம்ப பாடசாலை மாணவன் முதலிடம்

### 2ஆம் இடம் பொஸ்கோ மாணவனுக்கு



(யாழ்ப்பாணம்)

நேற்றைய தினம் வெளியாகிய 2024ஆம் ஆண்டுக்கான தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் யாழ்.மாவட்டத்தில் 186 புள்ளிகளைப் பெற்ற யாழ்.இந்து ஆரம்ப பாடசாலை மாணவன் செல்வன் பரமேஸ்வரன் 15

## தரம் 5 புலமைப்பரிசில் பெறுபேறு

### யாழ்.பொஸ்கோ வித்தியாலயம் - 135
### யாழ்.இந்து ஆரம்ப பாடசாலை - 134

(யாழ்ப்பாணம்)

2024ஆம் ஆண்டுக்கான தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சைப் பெறுபேறுகள் நேற்று வெளியாகின.

நேற்று வெளியாகிய பரீட்சைப் பெறுபேறுகளின் பிரகாரம் யாழ். பொஸ்கோ வித்தியாலய மாணவர்கள் 135 பேர் புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்துள்ளதுடன் யாழ்.இந்து ஆரம்ப பாடசாலை மாணவர்கள் 134 பேர் சித்தியடைந்து நாடளாவிய ரீதியில் தமிழ்ப் பாடசாலைகளில் முதல் நிலையைப் பெற்றுள்ளன. (ம-7)

### அரசியல் பழிவாங்கல்கள் தொடர்ந்தால்

# அரசுக்கு எதிராக எதிர்ப்பு நடவடிக்கை

## சம்பிக்க ரணவக்க எச்சரிக்கை



(கொழும்பு)

அரசியல் பழிவாங்கல்கள் தொடர்ந்தால் அநுர அரசுக்கு எதிராக எதிர்ப்பு நடவடிக்கையை முன்னெடுப்போம் என சம்பிக்க ரணவக்க எச்சரிக்கை விடுத்துள்ளார்.

(02ஆம் பக்கம் பார்க்க)

### 2026ஆம் ஆண்டு முதல்

## கல்வி முறையில் சீர்திருத்தங்கள்

### சபையில் பிரதமர் ஹரிணி

(கொழும்பு)

2026ஆம் ஆண்டு முதல் கல்வி முறையில் சீர்திருத்தங்கள் மெற்கொள்ளப்படும் என பிரதமர் கலாநிதி ஹரிணி அமரசூரிய தெரிவித்தார். 15

## ஆவரங்காலில் விபத்து; இளைஞன் உயிரிழப்பு



(யாழ்ப்பாணம்)

ஆவரங்காலில் இடம்பெற்ற மோட்டார் சைக்கிள் விபத்தில் படுகாயமடைந்த இளைஞன் நேற்று உயிரிழந்துள்ளார்.

இதில் அச்சுவேலி தெற்கைச் சேர்ந்த உதயநாதன் விதுசன் (வயது-32) என்ற இளைஞனே 15

### கனடாவில் வாகன விபத்து

## நீர்வேலியைச் சேர்ந்த தந்தையும் அவரது 3 வயது மகளும் மரணம்





(ரொரன்ரோ)

கனடாவில் இடம் பெற்ற வாகன விபத்தில் நீர்வேலியைச் சேர்ந்த தந்தையும் அவரது 3 வயது மகளும் மரணமடைந்துள்ளனர்.

வாகனமொன் 02

### தமிழ் மக்களுக்கான தீர்வுத்திட்டம்

## திட்டமிட்ட கலந்துரையாடலிலிருந்து விலகியது தமிழரசுக் கட்சி

(யாழ்ப்பாணம்)

தமிழ் மக்களுக்கான தீர்வுத் திட்டம் தொடர்பில் திட்டமிட்டிருந்த கலந்துரையாடலிலிருந்து விலகுவதாக இலங்கைத் தமிழரசுக் கட்சி அறிவித்துள்ளது.

புதிய அரசியலமைப்பு உருவாக்க விவகாரத்தில் தமிழ்த் தேசியக் கட்சிகளை ஒன்றிணைக்கும் நோக்கில் முன்னெடுக்கப்பட்டுவரும் முயற்சிகளின் அடுத்த கட்டமாகத் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் பாராளுமன்றக் குழுத்தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம், இலங் 15

## கிளிநொச்சியை சேர்ந்த இருவர் ஓமந்தையில் கைது

(வவுனியா)

வவுனியாவில் பெண்களைத் தாக்கி தொலைபேசியைக் கொள்ளையடித்த கிளிநொச்சியைச் சேர்ந்த இருவர் ஓமந்தையில் வைத்து கைது செய்யப்பட்டுள்ளனர். 15

### யாழ்.போதனா வைத்தியசாலையில்

## பாதுகாப்பு உத்தியோகத்தரை தாக்கிய பொலிஸார்

(யாழ்ப்பாணம்)

யாழ்.போதனா வைத்தியசாலையில் கடமையிலிருந்த பாதுகாப்பு உத்தியோகத்தரை சிவில் உடையில் வந்த பொலிஸார் ஒருவர் தாக்கியுள்ளார்.

நேற்று வியாழக்கிழமை இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது.

இவ்விடயம் தொடர்பில் தெரியவருகையில்,

யாழ்.போதனா வைத்திய சாலையின் பார்வையாளர் அனுமதிக்கப்படும் பாதையில் கடமை 15

## மோ.சைக்கிளில் பயணித்தவர் மயங்கி விழுந்து மரணம்

### சுன்னாகத்தில் சம்பவம்

(யாழ்ப்பாணம்)

மோட்டார் சைக்கிளில் பயணித்த குடும்பஸ்தர் ஒருவர் மயங்கி விழுந்து உயிரிழந்துள்ளார்.

சுன்னாகத்தில் நேற்று முன்தினம் மாலை இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது.

இதில் செட்டிவளவு இணுவில் மேற்கைச் சேர்ந்த சபாபதிப்பிள்ளை நித்தியானந்தன் (வயது-64) என்ற நான்கு பிள்ளைகளின் தந்தையே உயிரிழந்தவராவார்.

சம்பவ இடத்துக்கு நோயாளர் காவு 02

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சை வெட்டுப்புள்ளி விபரம்

| மாவட்டம் | சிங்கள மொழி மூலம் | தமிழ் மொழி மூலம் |
|---|---|---|
| கொழும்பு | 143 | 141 |
| கம்பஹா | 143 | 141 |
| களுத்துறை | 143 | 141 |
| கண்டி | 143 | 141 |
| மாத்தளை | 143 | 141 |
| நுவரெலியா | 136 | 139 |
| காலி | 143 | 141 |
| மாத்தறை | 143 | 141 |
| அம்பாந்தோட்டை | 139 | 139 |
| யாழ்ப்பாணம் | - | 139 |
| கிளிநொச்சி | - | 139 |
| மன்னார் | 130 | 138 |
| வவுனியா | 130 | 139 |
| முல்லைத்தீவு | 130 | 138 |
| மட்டக்களப்பு | 130 | 139 |
| அம்பாறை | 136 | 139 |
| திருகோணமலை | 135 | 138 |
| குருநாகல் | 143 | 141 |
| புத்தளம் | 137 | 138 |
| அநுராதபுரம் | 137 | 138 |
| பொலநறுவை | 137 | 138 |
| பதுளை | 137 | 139 |
| மொனராகலை | 137 | 138 |
| இரத்தினபுரி | 139 | 136 |
| கேகாலை | 143 | 141 |

## நீர்வேலியை...

றில் மோதுண்டு விபத்துக்குள்ளான நிலையில் குறித்த நபர் வாகனத்தை விட்டு கீழே இறங்கி மகளை தூக்கிக் கொண்டு வீதியின் மறுமுனைக்கு செல்ல முயற்சித்த போது பிறிதொரு வாகனம் குறித்த இருவர் மீதும் மோதியதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இந்த மோதல் காரணமாக குறித்த இருவரும் படுகாயமடைந்து வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பலனின்றி இருவரும் உயிரிழந்துவிட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இந்தச் சம்பவம் தொடர்பில் பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர். (ம-7)

## மோ.சைக்கிளில்...

வண்டி வரவழைக்கப்பட்டு சடலம் தெல்லிப்பளை ஆதார வைத்தியசாலைக்கு எடுத்துச் செல்லப்பட்டது.

பின்னர் அங்கிருந்து உடற்கூற்றுப் பரிசோதனைக்காக உயிரிழந்த குடும்பஸ்தரது சடலம் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டது.

யாழ்.போதனாவில் மேற்கொள்ளப்பட்ட உடற்கூற்றுப் பரிசோதனையில் மாரடைப்பால் மரணம் ஏற்பட்டதாக அறிக்கையிடப்பட்டுள்ளது.

மரண விசாரணைகளை யாழ். மாவட்ட திடீர் மரண விசாரணை அதிகாரி ஆ.ஜெயபாலசிங்கம் மேற்கொண்டார். (ம-7)

## அரசுக்கு...

நேற்று வியாழக்கிழமை (23) விசேட அறிவிப்பொன்றை வெளியிட்டு இவ்வாறு எச்சரிக்கை விடுத்த அவர் மேலும் குறிப்பிடுகையில்,

அநுர - ஹரிணி அரசாங்கத்தின் முதலாவது அரசியல் பழிவாங்கலாக முன்னாள் அமைச்சர் அநுரபிரியதர்ஷன யாப்பா மற்றும் அவரது மனைவி உள்ளிட்டோர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

2014 இல் வெள்ள அனர்த்தத்துக்கான இழப்பீட்டுத் தொகை குறித்த விவகாரத்தின் அடிப்படையிலேயே அவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

அர்ஜூன மகேந்திரனைக் கைது செய்து மத்திய வங்கி பிணைமுறி ஊழலுக்கு எதிராகச் சட்ட நடவடிக்கை எடுப்பதாகக் கூறியே இவர்கள் ஆட்சியைப் பொறுப்பேற்றனர்.

2022 பொருளாதார நெருக்கடிக்கு பொறுப்புக் கூற வேண்டியவர்களுக்கு மனித உரிமை மீறல் குற்றச்சாட்டின் அடிப்படையில் நீதிமன்றத்தால் தண்டனை வழங்கப்பட்டது. எனினும் குற்றவியல் வழக்குத் தாக்கல் செய்து இதுகுறித்து முறையான விசாரணைகள் முன்னெடுக்கப்படும் என்று நாம் எண்ணினோம். இலத்திரனியல் வீசா ஊழலில் 320 கோடி ரூபா இழக்கச் செய்த அரசியல்வாதிகள், அதிகாரிகளுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்படும் என்று எதிர்பார்த்தோம்.

நாட்டை வங்குரோத்தடையச் செய்த உண்மையான குற்றவாளிகளுக்கு எதிராகச் சட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்கு அன்றி, இவ்வாறான அரசியல் பழிவாங்கல்களுக்காக இந்த அரசாங்கத்துக்கு மக்கள் ஆணையை வழங்கவில்லை.

எனவே அரசாங்கம் தொடர்ச்சியாக இவ்வாறான செயற்பாடுகளில் ஈடுபடும் பட்சத்தில் பாரிய எதிர்ப்பு நடவடிக்கைகளில் ஈடுபடுவோம் என அரசாங்கத்துக்கு எச்சரிக்கின்றோம். குற்றப்புலனாய்வுப் பிரிவு அரசாங்கத்தின் கைப்பாவையாகியுள்ளது. முழு உலகும் இதனை பார்த்துக் கொண்டிருக்கிறது என்பதை பதில் பொலிஸ்மா அதிபருக்கு நினைவுபடுத்துகின்றோம் என்றார். (ம-7)

## நாடளாவிய ரீதியில் சுற்றிவளைப்பு
## 10 நாளில் 167 பேர் கைது

நாடளாவிய ரீதியில் மேற்கொள்ளப்பட்ட விசேட சுற்றிவளைப்பில் கடந்த 10 நாட்களில் குற்றச் செயல்களில் நேரடியாக ஈடுபட்டதாகக் கூறப்படும் 167 சந்தேகநபர்களும் பிடியாணை பிறப்பிக்கப்பட்ட 2,561 பேரும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இந்தக் காலப்பகுதியில் 3 ரி- 56 ரக துப்பாக்கிகளும் 03 கைத்துப்பாக்கிகளும் பொலிஸாரால் கைப்பற்றப்பட்டுள்ளன.

அத்துடன் போதைப் பொருள் சுற்றிவளைப்பின் போது கடந்த 10 நாட்களில் 462 கிலோகிராம் கேரளக் கஞ்சாவும் 15 கிலோகிராம் ஹஷிஸ் போதைப்பொருளும் 08 கிலோகிராம் ஐஸ் போதைப் பொருளும் கைப் பற்றப்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர். (ம-7)


## நாகபூஷணி திருமண சேவை

வைத்தியர், பொறியியலாளர், அரச, தனியார் துறை, உள்நாட்டு, வெளிநாட்டு மணமக்கள் பல்லாயிரக் கணக்கில் எம்மிடம் உள்ளனர்.

மிகப் பொருத்தமான ஜாதகங்கள் உடன் தரப்பட்டு, துரிதமாகத் திருமணம் நிறைவேற்றித் தரப்படும்.

(3207)

**198, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.**
(வன்னி இன் ஹோட்டலுக்கு அருகில்)
077 138 7596, 071 999 9306, 021 222 9306


## மரண அறிவித்தல்

பிறப்பு
17 - 03 - 1948



இறப்பு
20 - 01 - 2025

### வைத்திய கலாநிதி வசந்தமாலிகா கருணாகரன்

மலேசியாவைப் பிறப்பிடமாகவும் பிரித்தானியாவை வசிப்பிடமாகவும் கொண்ட வசந்தமாலிகா கருணாகரன் அவர்கள் கடந்த (20.01.2025) திங்கட்கிழமை அன்று சிவபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற வைத்திய கலாநிதி வேலுப்பிள்ளை கருணாகரன் அவர்களின் அன்பு மனைவியும் Dr.வித்தியன், Dr.பாலமுருகன் ஆகியோரின் பாசமிகு தாயாரும் Dr.சிவமாலா, Dr.ரெபெக்கா ஆகியோரின் அன்பு மாமியாரும் இராஜசூரியர், உதயசங்கர், காலஞ்சென்ற இராஜேந்திரபிரசாத் ஆகியோரின் அன்புச் சகோதரியும் Dr.சாந்தினி, கார்த்திகா ஆகியோரின் அன்பு மைத்துனியும் யுவராஜ் அவர்களின் பாசமிகு பாட்டியும் ஆவார்.

அன்னாரின் தகனக்கிரியைகள் 26.01.2025 ஞாயிற்றுக்கிழமை அன்று பிரித்தானியாவில் இடம்பெறும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

*தகவல்:*
குடும்பத்தினர்

(3202)

## மரண அறிவித்தல்

### திரு. சபாபதிப்பிள்ளை நித்தியானந்தன்
(ஆனந்தன் அண்ணை - கணபதி சுருட்டு N.R உரிமையாளர்)



இணுவில் மேற்கு செட்டிவளவு ஒழுங்கையைச் சேர்ந்த திரு. சபாபதிப்பிள்ளை நித்தியானந்தன் (ஆனந்தன் அண்ணை) அவர்கள் 22.01.2025 புதன்கிழமை அன்று இறைவனடி சேர்ந்தார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விபரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

செட்டிவளவு,
இணுவில் மேற்கு, இணுவில்.

(C-2122)

*தகவல்:*
குடும்பத்தினர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கைக்கு 200 மில்லியன் டொலர்கள் வழங்க உலகவங்கி திட்டம்



(கொழும்பு)

**அடுத்த மூன்று மாதங்களில் 200 மில்லியன் டொலர் மதிப்புள்ள மூன்று பெரிய திட்டங்களுக்கு இலங்கைக்கு நிதியளிக்க உலக வங்கி திட்டமிட்டுள்ளதாக உலகவங்கியின் தெற்காசியாவிற்கான துணைத்தவிசாளர் மார்ட்டின் ரைசர் தெரிவித்தார்.**

இலங்கைக்கு இரண்டு நாள் விஜயம் மேற்கொண்ட அவர் ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்க, பிரதமர் ஹரிணி அமரசூரிய மற்றும் பிற அரச அதிகாரிகள், தனியார் முதலீட்டாளர்கள் மற்றும் மேம்பாட்டு பங்காளிகளைச் சந்தித்து இலங்கையின் பொருளாதார மீட்சி மற்றும் நீண்டகால வளர்ச்சிக்கான நாட்டின் தொடர்ச்சியான முயற்சிகள் குறித்து கலந்துரையாடல்களை நடத்தினார்.

இந்நிலையில் அடுத்த மூன்று மாதங்களில் 200 மில்லியன் டொலர் மதிப்புள்ள மூன்று பெரிய திட்டங்களுக்கு நிதியளிக்க உலக வங்கி திட்டமிட்டு மீண்டும் தனது ஆதரவை உறுதிப்படுத்தியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதன்படி குறித்த திட்டங்கள் கிராமப்புற மேம்பாடு மற்றும் கல்விக்கு ஆதரவு தெரிவிக்கும் வகையிலும் புதுப்பிக்கத்தக்க எரிசக்தியில் தனியார் முதலீட்டை ஈர்க்கும் வசதியை ஏற்படுத்தும் நோக்கிலும் முன்னெடுக்கப்படவுள்ளது. (நி-8)

# சிவபூமி திருக்குறள் வளாக திறப்பு விழா



(யாழ்ப்பாணம்)

மாவிட்டபுரம் சிவபூமி திருக்குறள் வளாகத் திறப்புவிழா எதிர்வரும் பெப்ரவரி மாதம் 2 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 8.30 மணிக்கு இடம்பெறவுள்ளது.

சிவபூமி அறக்கட்டளைத் தலைவர் செஞ்சொற்செல்வர் கலாநிதி ஆறு.திருமுருகன் தலைமையில் இடம்பெறும் இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக இந்திய உச்ச நீதிமன்ற நீதியரசர் ர.மகாதேவன், சிறப்பு விருந்தினர்களாக யாழ். இந்தியத் துணைத்தூதுவர் சாய்முரளி, சிரேஷ்ட சட்டத்தரணி கலாநிதி குமார் வடிவேல் குருபரன், கௌரவ விருந்தினர்களாக வைத்திய நிபுணர் சொ.கமலாகரன் தம்பதிகள், வைத்திய நிபுணர் க.கேதீஸ்வரன் தம்பதிகள், கணக்காளர் சு.பாலசிங்கம் தம்பதிகள், செல்வி. சியாமளா புஸ்பநாதன் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.

காலை, மாலை என இரு பிரிவுகளாக இடம்பெறவுள்ள இந்நிகழ்வில் காலை நிகழ்வாக சிவபூமி அறக்கட்டளை இணைச் செயலாளர் மகேசன் தயாகரன் வரவேற்புரையினை நிகழ்த்தவுள்ளார்.

அதனைத் தொடர்ந்து ஆசியுரைகளினை மாவை ஆதீன முதல்வர் மகாராஜஸ்ரீ ச.இரத்தினசபாபதிக் குருக்கள், நல்லை ஆதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாச்சாரிய சுவாமிகள், கோப்பாய் சுப்ரமுனிய கோட்ட முதல்வர் ரிஷி தொண்டு நாதன் சுவாமிகள் ஆகியோர் வழங்கவுள்ளனர்.

தொடர்ந்து யாழ். பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் சி.சிறிசற்குணராஜா, கிழக்கிலங்கை பல்கலைக்கழக துணைவேந்தர் வ.கனகசிங்கம், வவுனியா பல்கலைக்கழகத் துணைவேந்தர் பேராசிரியர் அ.அற்புதராஜா, யாழ்ப்பாணத் தமிழ்ச் சங்க பெருந்தலைவர் பேராசிரியர் அ. சண்முகதாஸ் வலி வடக்கு பிரதேச செயலர் திருமதி சிவகெங்கா சுதீஸ்னர் ஆகியோர் வாழ்த்துரைகளை வழங்கவுள்ளனர்.

வாழ்த்துரைகளைத் தொடர்ந்து பிரதம, சிறப்பு விருந்தினர் உரைகள் இடம்பெறும். அத்துடன் சிவபூமி அறக்கட்டளையின் வெள்ளிவிழா நிறைவை முன்னிட்டு சிவபூமி சிறப்பு மலர் வெளியீடு இடம்பெறும். இம்மலரினை அதன் ஆசிரியர் பொறியியலாளா ச.சந்தோஷன் வெளியிட்டு வைக்கவுள்ளார்.

தொடர்ந்து கலாநிதி.மனோன்மணி சண்முகதாஸ் அவர்களினால் திருக்குறள் உரை நூல் அறிமுகம் செய்து வைக்கப்படும்.


3.30 மணிக்கு ஆரம்பமாகும் மாலை நிகழ்வில் பிரதம விருந்தினராக வட மகாண ஆளுநர் நாகலிங்கம் வேதநாயகன் கலந்து கொள்வதுடன் கௌரவ விருந்தினர்களாக யாழ்.பல்கலைக்கழக முன்னாள் துணை வேந்தர்களான வாழ்நாள் பேராசிரியர் பொ.பாலசுந்தரம்பிள்ளை, பேராசிரியர் நா.சண்முகலிங்கன், யாழ். அரச அதிபர் ம.பிரதீபன், முல்லைத்தீவு அரச அதிபர் அருளானந்தம் உமா மகேஸ்வரன், கிளிநொச்சி அரச அதிபர் சுப்ரமணியம் முரளிதரன், மன்னார் அரச அதிபர் கனகசபாபதி கனகேஸ்வரன், யாழ். பல்கலை கலைப்பீட பீடாதிபதி பேராசிரியர் சிவசுப்ரமணியம் ரகுராம், யாழ்.பல்கலை தமிழ்த்துறைத் தலைவர் பேராசிரியர் கிருஷ்ணபிள்ளை விசாகரூபன் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.

வரவேற்புரையினை சிவபூமி அறக்கட்டளை உப தலைவர் வைத்திய நிபுணர்.த.பேரானந்தராஜா நிகழ்த்தவுள்ளார்.

சிறப்பு நிகழ்வுகளாக, யாழ்.பல்கலைக்கழகத் தமிழ்த்துறை முன்னாள் தலைவர் பேராசிரியர் சி.சிவலிங்கராஜா தலைமையில் கவியரங்க நிகழ்வும், யாழ்.பல்கலைக்கழக உயர் பட்டப் படிப்புகள் பீட பீடாதிபதி பேராசிரியர் திருநாவுக்கரசு வேல் நம்பி தலைமையில் பட்டிமண்டப நிகழ்வும் நடைபெறவுள்ளது. (நி-8)

# வட்டுவாகல் பாலத்திற்கான நிதி ஒதுக்கீடு உறுதியானது

## ரவிகரன் எம்.பி



(கொழும்பு)

முல்லைத்தீவு - வட்டுவாகல் பாலம் அமைப்பதற்கு 2025ஆம் ஆண்டிற்குரிய வரவு-செலவுத்திட்டத்தில் நிதி ஒதுக்கீடு செய்யப்படுமென போக்குவரத்து, நெடுஞ்சாலைகள், துறைமுகங்கள் மற்றும் சிவில் விமானப் போக்குவரத்து அமைச்சர் பிமல் ரத்நாயக்க தெரிவித்துள்ளார்.

பாராளுமன்றத்தில் நேற்று முன்தினம் புதன்கிழமை வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் து.ரவிகரனை சந்தித்துக் கலந்துரையாடிய போதே அமைச்சர் விமல் ரத்நாயக்க இதனைத் தெரிவித்துள்ளார்.

இந்நிலையில் தமது தொடர் முயற்சிக்குப் பலன்கிடைத்திருப்பது மகிழ்ச்சியளிப்பதாகவும் ஜனாதிபதிக்கும் அமைச்சர் பிமல் ரத்நாயக்கவிற்கும் பிரதி அமைச்சர் உபாலி சமரசிங்கவிற்கும் நன்றிகளைத் தெரிவித்துக் கொள்வதாகவும் பாராளுமன்ற உறுப்பினர் து.ரவிகரன் தெரிவித்துள்ளார். (நி-8)

# 5 இலட்சம் கடவுச்சீட்டுக்களை கொள்வனவு செய்யத் தீர்மானம்

புதிய வெளிநாட்டு கடவுச்சீட்டு விநியோகத்தில் உள்ள தற்போதைய நெருக்கடி நிலைமையை நிவர்த்தி செய்வதற்கு அவசர நடவடிக்கையாக மறு கொள்முதல் மூலம் 5இலட்சம் வெளிநாட்டு கடவுச்சீட்டுக்களைப் பெற்றுக்கொள்ள அரசாங்கம் முடிவு செய்துள்ளது.

எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ வாய்மொழி மூலமாக எழுப்பிய கேள்விக்குப் பதிலளிக்கும் போதே பொதுமக்கள் பாதுகாப்பு மற்றும் பாராளுமன்ற விவகார அமைச்சர் ஆனந்த விஜேபால இதனைத் தெரிவித்தார்.

மறு கொள்முதல் மூலம் 5 இலட்சம் கடவுச்சீட்டுக்களைக் கொள்வனவு செய்வதற்கு தேவையான நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. எதிர்வரும் திங்கட்கிழமைக்குள் இது தேசிய பத்திரிகைகளில் அறிவிக்கப்பட்டு, 5 இலட்சம் புதிய கடவுச்சீட்டு கொள்வனவுக் கான விலைமனுக் கோரல் வெளியிடலாம் என நினைக்கிறேன் என்றார். (ம-7)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 7 விக்கெட் வித்தியாசத்தில் இந்தியா அபார வெற்றி



இங்கிலாந்துக்கு எதிரான முதல் ரி-20 போட்டியில் இந்தியா 7 விக்கெட் வித்தியாசத்தில் வெற்றி பெற்று தொடரில் 1-0 என்ற கணக்கில் முன்னிலை பெற்றது.

இந்தியா மற்றும் இங்கிலாந்து அணிகள் மோதும் 5 போட்டிகள் கொண்ட ரி-20 தொடரின் முதல் போட்டி கொல்கத்தாவில் உள்ள ஈடன் கார்டன் மைதானத்தில் நேற்று முன்தினம் இரவு நடைபெற்றது.

போட்டியில் நாணய சுழற்சியில் வெற்றி பெற்ற இந்தியா பந்து வீச்சைத் தேர்வு செய்தது.

அதற்கிணங்க முதலில் துடுப்பெடுத்தாடிய இங்கிலாந்து 20 ஓவர்களில் அனைத்து விக்கெட்டுகளையும் இழந்து 132 ஓட்டங்களை மாத்திரம் பெற்றது.

அணித் தலைவர் ஜோஸ் பட்லர் மாத்திரம் அதிகபடியாக 44 பந்துகளில் 68 ஓட்டங்களைப் பெற்றார்.

பந்து வீச்சில் இந்திய அணி சார்பில் வருண் சக்ரவர்த்தி 3 விக்கெட்டுகளையும், அர்ஷ்தீப் சிங், ஹர்த்திக் பாண்டியா மற்றும் அக்ஸர் படேல் ஆகியோர் தலா 2 விக்கெட்டுகளையும் கைப்பற்றினர்.

வெற்றி இலக்கினை நோக்கி பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய இந்திய அணி 12.5 ஓவரில் 133 ஓட்டங்களை எடுத்து வெற்றி பெற்றது. போட்டியின் ஆட்டநாயகனாக வருண் சக்ரவர்த்தி தெரிவானார்.

இந்த வெற்றியின் மூலம் 5 போட்டிகள் கொண்ட ரி-20 தொடரில் இந்தியா 1:0 என்ற கணக்கில் முன்னிலை பெற்றது. இரண்டாவது ரி - 20 போட்டி நாளை சனிக்கிழமை சென்னை, சிதம்பர மைதானத்தில் இடம்பெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (6-8)

## சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி ரூபா | மருதனார்மடம் ரூபா | சாவகச்சேரி ரூபா | நெல்லியடி ரூபா |
|---|---|---|---|---|
| கத்தரிக்காய் | 350 | 280 | 300 | 350-400 |
| உருளைக்கிழங்கு | 180 | 180 | 180 | 160 |
| பச்சைமிளகாய் | 800 | 1100 | 1000 | 1000-1100 |
| தக்காளி | 350 | 350 | 350 | 300 |
| மரவள்ளிக்கிழங்கு | 240 | 200 | 200 | 200 |
| கோவா | 200 | 200 | 200 | 150 |
| கரட் | 250 | 350 | 400 | 300 |
| பூசணி | 120 | 120 | 150 | 70-90 |
| புடோல் | 150 | 150 | 150 | 120-130 |
| வாழைக்காய் | 120 | 140 | 150 | 320 |
| சின்ன வெங்காயம் | 400 | 380 | 350 | 300 |
| பெரிய வெங்காயம் | 350 | 280 | 250 | 500-600 |
| பாகற்காய் | 400 | 400 | 500 | 250-200 |
| வெண்டக்காய் | 150 | 450 | 200 | 100 |
| கருணைக் கிழங்கு | 120 | 130 | 150 | 350-400 |
| பயற்றங்காய் | 450 | 600 | 400 | 350-400 |
| லீக்ஸ் | 300 | 350 | 300 | 400 |
| பீற்றூட் | 550 | 500 | 400 | 650-750 |
| கறிமிளகாய் | 800 | 600 | 700 | - |
| முருங்கைக்காய் | - | - | 120 | 300-350 |
| போஞ்சி | 350 | 300 | 400 | 300 |
| கத்தரிதம்புள்ள | 300 | 200 | 300 | ,60-80 |
| கீரை - 1 பிடி | 120 | 100 | 150 | 150-200 |
| தேசிக்காய் | 250 | 300 | 400 | 500 |
| தேங்காய் (ஒன்று) | 220 | 240 | 200 | 300-400 |
| இராசவள்ளி | 500 | 850 | 500 | 100 |
| வெங்காயப்பூ | 550 | 250 | 400 | 100 |
| முள்ளங்கி | 180 | 120 | 150 | 50 |
| பொன்னாங்காணி | 120 | 80 | 150 | 100 |
| வல்லாரை | 60 | 70 | 100 | 200 |
| ஈரப்பலா | 100 | 150 | 100 | 80-100 |

## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 3290

### நேகா

டெய்லி எங்கிட்ட வந்து நாலு பாட்டு கேக்காம தூங்க மாட்டியே இப்பலாம் ஏன்பா வர்றதே இல்ல..?




நீ போடுற விளம்பரத்த பாத்து தாங்கமுடியாம தான்டா வர்றதில்ல

### கோபி

இவ்ளோ காலமா நான் கஷ்டப்பட்டுட்டு இருக்கேன்.. இனிமேலாவது என் லைப்ல நல்ல Story எழுதுங்க GOD




மாமா Pen Ink தீர்ந்து போச்சு மாமா

### லக்சி

எருமை கிட்ட இருந்து பொறுமைய கத்துக்கலாம் தப்பில்ல ஆனா...



அந்த எருமையே நம்மள பாத்து காரி துப்புற அளவுக்கு பொறுமையா இருக்கக்கூடாது

### ரகு


தம்பி உனக்கு இருக்கிற ஸ்பெசல் டலேன்ட்டு என்னடா..?



நல்லா படிச்சி மனப்பாடம் பண்ணி எச்சாம்ல போயி மறந்திடுவேன் சார்...

### சேகர்

ஆசையும்... பசியும் பணமும்... இல்லாவிட்டால்



மனிதன் மனிதனாகவே இருந்து இருப்பான்....

### ஜெயா

இன்னைக்கு உங்க ராசிக்கு அமைதியா இருன்னு காலண்டர்ல போட்டுப்பாங்க.. கல்யாணம் ஆனதுல இருந்து அப்படி தானே சார் இருக்கோம்....



நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampuri எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# 3 வாரங்களில் 3,649 டெங்கு நோயாளர்கள்

(கொழும்பு)

இந்த வருடத்தின் முதல் 3 வாரங்களில் நாட்டில் 3,649 டெங்கு நோயாளிகள் பதிவாகியுள்ளதாக தேசிய டெங்குக் கட்டுப்பாட்டுப் பிரிவு தெரிவித்துள்ளது.

அத்துடன் 2 டெங்கு மரணங்களும் பதிவாகியுள்ளதாக மேற்படி பிரிவு தெரிவித்துள்ளது.

அதிக எண்ணிக்கையிலான நோயாளர்கள் மேல் மாகாணத்தில் பதிவாகியுள்ளனர்.

கொழும்பு மாவட்டத்தில் 491 நோயாளர்களும், கம்பஹா மாவட்டத்தில் 558 நோயாளர்களும், களுத்துறை மாவட்டத்தில் 95 நோயாளர்களும் பதிவாகியுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நாடு முழுவதும் டெங்கு நோய் பரவக்கூடிய அதிக ஆபத்துள்ள சுகாதார வைத்திய அதிகார பிரிவுகள் 22 அடையாளம் காணப்பட்டுள்ளதாகத் தேசிய டெங்கு கட்டுப்பாட்டுப் பிரிவு தெரிவித்துள்ளது. (நி-8)

# இலங்கையிலிருந்து சீனாவுக்கு கோழி இறைச்சி ஏற்றுமதி

(கொழும்பு)

உள்ளூர் கோழிப் பண்ணைத் தொழிலில் ஒரு திருப்புமுனையை ஏற்படுத்தும் வகையில், சீனச் சந்தைக்கு கோழி இறைச்சிப் பொருட்களை நேரடியாக ஏற்றுமதி செய்வதற்கான உடன்படிக்கையை இலங்கை மேற்கொண்டுள்ளது.

ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்கவின் அண்மைய சீன விஜயத்தின் போது கைச்சாத்திடப்பட்ட 15 ஒப்பந்தங்களில் இதுவும் ஒன்று என நேற்று முன்தினம் ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவித்த வெளிவிவகார அமைச்சர் விஜித ஹேரத் குறிப்பிட்டார்.

உடன்படிக்கையின் விபரங்களை வழங்குகையில், இலங்கை தனது இறைச்சி பதப்படுத்தும் தொழிற்றுறையின் உப தயாரிப்பான கோழியின் தலைகள் மற்றும் கால்களை நேரடியாக சீனாவிற்கு ஏற்றுமதி செய்ய அனுமதிக்கப்படும்.


இந்த ஒப்பந்தம் பொருளாதாரம் அதன் அந்நிய செலாவணி வருவாயை அதிகரிக்க உதவும் எனத் தெரிவித்தார்.

ஜனாதிபதியின் சீன விஜயத்திற்கு முன்னதாக, சீனச் சந்தைக்கு கோழி இறைச்சியை ஏற்றுமதி செய்வது தொடர்பான நெறிமுறையில் கைச்சாத்திடுவதற்கு விவசாய மற்றும் கால்நடை அமைச்சர் முன்வைத்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியிருந்தமையும் குறிப்பிடத்தக்கது. (நி-8)

# 'திரிகல்' திரைப்படம் திரையில் நாளை

(யாழ்ப்பாணம்)

யாழ்.திரைப்படக் கழகத்தின் ஏற்பாட்டில் கடந்த 2024 ஆம் ஆண்டு காலமான திரைப்பட இயக்குனர் அமரர்.ஷியாம் பெனகலுக்கு அஞ்சலி செலுத்தும் முகமாக அவரது நெறியாள்கையில் உருவாக்கப்பட்ட "திரிகல்"(இறந்த காலம், நிகழ் காலம், எதிர்காலம்) எனும் திரைப்படம் யாழ்.தந்தை செல்வா கலையரங்கில் நாளை மாலை 4 மணிக்கு திரையிடப்படவுள்ளது.






கோவாவில் வசிக்கும் போத்துக்கேய வம்சாவளியினரின் வாழ்க்கைப் பின்னணியில் அமைந்த இத் திரைப்படம் தேசிய விருது வென்றுள்ளமை குறிப்பிடத்தக்கது. (6-8)

# மீன்பிடித்துறையை வலுப்படுத்தல் தொடர்பில் அமெரிக்க தூதுவருடன் கலந்துரையாடிய அமைச்சர்

(கொழும்பு)


இலங்கையின் மீன்வளத் துறையை வலுப்படுத்துதல் மற்றும் அதன் முக்கிய சவால்களை எதிர்கொள்வதற்கான கூட்டு முயற்சிகள் குறித்து விவாதிப்பதற்காக கடற்றொழில், நீரியல் மற்றும் கடல் வளங்கள் அமைச்சர் ராமலிங்கம் சந்திரசேகர், இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவர் ஜூலிசங் இற்கிடையிலான சந்திப்பு நேற்று முன்தினம் அமைச்சகத்தில் இடம்பெற்றது.

இந்தக் கலந்துரை யாடலின் போது, இலங்கையின் மீன் வளத் துறையில் அமெரிக்க முதலீடுகளை ஈர்ப்பதற்காக முதலீட்டாளர் மன்றங்களை நடத்து வதற்குத் அமெரிக்க தூதுவர் தனது ஆதரவைத் தெரிவித்தார். பொருளாதார வாய்ப்புகளை உருவாக்குவதிலும், துறையின் வளர்ச்சித் திறனை மேம்படுத்துவதிலும் இத்தகைய முயற்சிகளின் முக்கியத்துவத்தை அமைச்சர் வலியுறுத்தினார். போதைப்பொருள் கடத்தலை எதிர்த்துப் போராடுவது மற்றும் கடல்சார் பாதுகாப்பை மேம்படுத்துவது ஆகிய அம்சங்களில், இலங்கை கடலோரக் காவல்படையை வலுப்படுத்துவதில் முக்கிய கவனம் செலுத்தப்பட்டது.

இலங்கையில் மீன் வளர்ப்பு நடைமுறைகளை மேம்படுத்துவது குறித்தும் கலந்துரையாடப்பட்டது. மேம்பட்ட மீன்வளர்ப்புத் தொழில்நுட்பங்கள் மற்றும் நவீன முறைகளை அறிமுகப்படுத்த அமெரிக்காவின் தொழில்நுட்ப உதவியை அமைச்சர் சந்திரசேகர் கோரினார். இது இந்தத் துறையின் நிலையான வளர்ச்சிக்கு உதவும் என்றும் குறிப்பிட்டார்.

மேலும், மீன்பிடித் துறைமுகங்களை நவீனமயமாக்குவது செயற்பாட்டுத் திறனை மேம்படுத்துவது, இலங்கையின் ஏற்றுமதித் திறனை அதிகரிப்பது குறித்தும் கலந்துரையாடப்பட்டது. (நி-8)

## கண்ணீர் அஞ்சலி



யா/ கரந்தன் இராமுப்பிள்ளை வித்தியாலய அதிபர்
திருமதி.சாந்தினி வாகீசன் அவர்களின் அன்புத்தாயார்

**அமரர். ஆச்சிமுத்து பொன்னம்பலம்**

அவர்கள் 22.01.2025 அன்று இறைபதம் அடைந்தார்.
அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திப்பதுடன் அவரின் இழப்பினால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

கோட்டக்கல்விப் பணிப்பாளரும் அதிபர்கள் சங்கமும்
கோப்பாய்க் கல்விக் கோட்டம்.

(C-2115)

# இராசிபலன்

24.01.2025
தை 11, வெள்ளிக்கிழமை
தசமி முன்னிரவு 6.17 மணிவரை

அனுசம் பின்னிரவு 6.18 மணிவரை
சுபநேரம் -6.36-8.06 மணிவரை
இராகுகாலம் 11.06-12.36 மணிவரை

சந்திராஷ்டமம் - பரணி

வளவன்




ஆரோக்கியத்தில் அக்கறை காட்டும் சூழ்நிலை ஏற்படலாம், வழிபாட்டால் ஆனந்தம் காண வேண்டிய நாள், மனதில் இனம்புரியாத கவலைகள் தோன்றி மறையும்.




உறவினர் நண்பர்களின் சந்திப்பால் உற்சாகமடைவீர்கள், தொழில் சிறப்புக்கள் கூடும், புதிய பொருட்களை வாங்கி மகிழும் வாய்ப்புண்டு, கௌரவமான நாள்.




ஆரோக்கியம் சம்பந்தப்பட்ட வகையில் இருந்த குறைகள் நீங்கும், வழிபாட்டில் ஆர்வம் கூடும், தன்னம்பிக்கை துளிர்விடும் நாள், கலகலப்பான செய்திகள் வந்து சேரலாம்.




அடிப்படை வசதி வாய்ப்புக்களைப் பெருக்கிக் கொள்ள முற்படுவீர்கள்,வழிபாட்டில் ஆர்வம் கூடும், புண்ணிய காரியங்களில் ஆர்வம் கூடும், தாழ்ந்த சுபாவமுண்டு.




வங்கிகளில் சேமிப்பை உயர்த்தும் எண்ணம் உருவாகும், சிந்தித்து செயற்பட்டு சிறப்புக்களைக் காணும் நாள், ஆன்மிக சிந்தனை மேலோங்கும் நாள், பயணங்களால் பலனுண்டு.




எடுத்த காரியங்களை எளிதில் செய்து முடித்து வெற்றி காணும் நாள், கொடுக்கல் வாங்கல்கள் ஒழுங்காக வள்ளல்களின் உதவியை நாடுவீர்கள், வெளியூர்த் தொடர்புகள் அனுகூலம் தரும்.




பெரிய மனிதர்களின் ஒத்துழைப்புக் கிடைக்கும் வாய்ப்புண்டு, உங்களின் பொறுமைக்கு இன்று பரிசு கிடைக்கும், எதிர்பாராத தனவரவுகள் வந்து சேரலாம்.




விரும்பிய காரியம் விரும்பிய படியே கைகூடும், பயணங்களால் பலனுண்டு, விருந்துகளில் கலந்து மகிழும் வாய்ப்புண்டு, வழிபாடு குதூகலம் தரும்.




தொழில் நலன்கருதிய பயணங்கள் இடம் பெறலாம், வீட்டுத் தேவைகளை நிறைவு செய்யும் எண்ணம் உருவாகும், உடல் நலனில் அக்கறை தேவை, மாற்றங்களால் ஏற்றமுண்டு.




பணத்தேவைகள் எளிதில் பூர்த்தியாகும், மறக்க முடியாத இனிய சம்பங்கள் இடம்பெறலாம், இயல்பான வாழ்க்கையில் இன்பங்கள் கூடும் நாள், போசன சுகமுண்டு.




வழிபாட்டில் ஆர்வம் கூடும், நல்லவர்களின் அறிவுரையும் ஆதரவும் கூடும் நாள், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும், செய்தொழில் மேன்மையுண்டு.




எதிர்பார்ப்புகள் நிறைவேறும் வாய்ப்புண்டு, தொழில் ரீதியான பயணங்கள் அனுகூலம் தரும், வழிபாட்டில் ஆர்வம் கூடும், ஆன்றோர்களின் சந்திப்புண்டு.

உழைப்பு சுறுசுறுப்பானது அது வசதிகளையும் நன்மதிப்பையும் பெற்றுத் தருகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சைவநெறி, தமிழ்மொழி நுண்ணறிவுத் தேர்வு

(யாழ்ப்பாணம்)

சைவ பரிபாலன சபையால் ஆண்டுதோறும் நடத்தப்படுகின்ற சைவநெறி மற்றும் தமிழ்மொழியும் நுண்ணறிவுத் தேர்வுகள் நாளை சனிக்கிழமை காலை 8.30 மணிக்கு நடைபெறவுள்ளது.

விண்ணப்பித்த மாணவர்கள் அனைவரும் தங்களுடைய பாடசாலைகள் ஊடாக பங்குபற்றுமாறும் மேலதிக விபரங்களை பாடசாலை அதிபர் ஊடாக அறிந்து கொள்ள முடியும் எனவும் ஏற்பாட்டாளர்கள் அறிவித்துள்ளனர். (6-8)

# உடுவில் பகுதியில் கசிப்பு உற்பத்தி நிலையம் முற்றுகை

## 330 லீற்றர் கோடா, 15 லீற்றர் கசிப்பு மீட்பு ஒருவர் கைது

(யாழ்ப்பாணம்)

உடுவில் பிரதேச செயலகத்திற்கு உட்பட்ட மல்வம் பகுதியில் இயங்கி வந்த கசிப்பு உற்பத்தி நிலையம் ஒன்று மானிப்பாய் பொலிஸாரினால் முற்றுகையிடப்பட்டு பெருமளவிலான கோடா மற்றும் கசிப்புடன் உற்பத்தி செய்யும் உபகரணங்களும் நேற்று கைப்பற்றப்பட்டுள்ளது.

மானிப்பாய் பொலிஸ் நிலைய குற்றத்தடுப்புப் பிரிவு மற்றும் பொலிஸ் சிறப்பு புலனாய்வுப் பிரிவினருக்கு கிடைத்த இரகசிய தகவலுக்கமைய பிரதேச பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி ஜி.ஜேகுணதிலக தலைமையிலான விசேட பிரிவினரால் இந்த கசிப்பு உற்பத்தி நிலையம் நேற்றையதினம் முற்றுகையிடப்பட்டது.

குறித்த முற்றுகையின் போது 330 லீற்றர் கோடா, 15 லீற்றர் கசிப்பு மற்றும் கசிப்பு உற்பத்திக்குப் பயன்படுத்தப்படும் பதார்த்தங்கள், தயாரிக்க பயன்படுத்தும் சில உபகரணங்கள் உள்ளிட்டவை பொலிஸாரால் கைப்பற்றப்பட்டுள்ளன.

அத்துடன் 39 வயதுடைய அதே பிரதேசத்தைச் சேர்ந்த நபர் ஒருவரும் சந்தேகத்தின் பெயரில் கைது செய்யப்பட்டுள்ளார்.

கைது செய்யப்பட்ட சந்தேக நபர் மற்றும் கைப்பற்றப்பட்ட கோடா, கசிப்பு மற்றும் உபகரணங்கள் உள்ளிட்ட பொருட்களை நீதிமன்றில் முன்நிலைப்படுத்த நடவடிக்கை எடுத்து வருவதாகப் பொலிஸார் தெரிவித்தனர். (6-8)



# யாழ்.முஸ்லிம் சமூகஜோதி விருது-2024

## 5 பேர் தெரிவு

(யாழ்ப்பாணம்)

யாழ்.முஸ்லிம் சமூக ஜோதி விருது-2024 இற்கு 5 பேர் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

எம். ஏ. சி. அப்துல்ஸலாம், மஹ்றூப் ஏ.காதர், அபூபக்கர் சுல்தான், யாழ். அஸீம் மற்றும் எம்.எம். முனாஸ் ஆகியோர் தெரிவாகியுள்ளனர். (6)

# இளங்கலைஞர் மன்றத்தின் கட்டடத் திறப்புவிழாவும் இசைவிழாவும்

(யாழ்ப்பாணம்)

நல்லூர் இளங்கலைஞர் மன்ற புதிய கட்டடத் திறப்பு விழாவும் இசை விழாவும் நாளை சனிக்கிழமை காலை 9 மணிக்கு நல்லூரில் அமைந்துள்ள இளங்கலைஞர் மன்றகலா மண்டபத்தில் காலை , மாலை என இரு பிரிவுகளாக இடம்பெறவுள்ளது.

காலை நிகழ்வில் பிரதம விருந்தினராக வடமாகாண ஆளுநர் நா.வேதநாயகன், சிறப்பு விருந்தினராக யாழ்.இந்திய துணைத்தூதுவர் சாய்முரளி, கௌரவ விருந்தினர்களாக சிவபூமி அறக்கட்டளை மற்றும் தெல்லிப்பளை துர்க்காதேவி தேவஸ்தான தலைவரும் இளங்கலைஞர் மன்ற காப்பாளருமான கலாநிதி. ஆறு.திருமுருகன், ஈழத்தின் சிரேஷ்ட இசையமைப்பாளர் இசைவாணர் மு.கண்ணன்.விசேட விருந்தினர்களாக தொழிலதிபர் திருவாளர் தங்கராசா ரூபன், திரு.திருமதி செல்வராசா சவுந்தராதேவி, கட்டட நிபுணர் ச.துவாரகன் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.

ஆசியுரையினை நல்லை ஆதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர ஞானசம்பந்த பரமாச்சாரிய சுவாமிகள் வழங்கவுள்ளார்.

மாலை 4 மணிக்கு இடம் பெறவுள்ள நிகழ்வில் ஈழத்து கலைஞர்களின் இசை நிகழ்வுகளும் இடம் பெறவுள்ளன. (6-8)

# சின்னம் சூட்டல் நிகழ்வு

(சாவகச்சேரி)

யா/இடைக்குறிச்சி ஸ்ரீ சுப்பிரமணிய வித்தியாலய மாணவத் தலைவர்களுக்கான சின்னம் சூட்டல் வைபவம் இன்று வெள்ளிக்கிழமை காலை 11 மணிக்கு பாடசாலை மண்டபத்தில் இடம் பெறவுள்ளது.

பாடசாலை முதல்வர் அபராஜிதன் தலைமையில் இடம் பெறவுள்ள மேற்படி நிகழ்வில் முதன்மை விருந்தினராக தென்மராட்சிக் கல்வி வலய கல்வி நிர்வாக பிரதிக் கல்விப் பணிப்பாளர் சு.ஸ்ரீகுமரன் கலந்து கொள்ளவுள்ளார். (6-30)

# கீரை வாய்க்கால் மதவினை புனரமைக்க நடவடிக்கை எடுங்கள்

(சாவகச்சேரி)

கைதடி கமநலசேவை நிலைய எல்லைப்பரப்பிற்குட்பட்ட மறவன்புலோ பகுதியில் அமைந்துள்ள கீரை வாய்க்கால் மதவினை புனரமைத்துத் தருமாறு கமக்கார அமைப்பினர் வடக்கு மாகாண ஆளுநர் மற்றும் விவசாய திணைக்களத்தினரிடம் கோரிக்கை விடுத்துள்ளனர்.

அண்மையில் மறவன்புலோ கிராமத்தில் இடம்பெற்ற நெல் அறுவடை ஆரம்ப விழாவின் போதே கமக்கார அமைப்பின் உபதலைவர் தர்ஷன் மேற்படி கோரிக்கையை முன் வைத்திருந்தார். இது தொடர்பாக மேலும் கருத்துத் தெரிவிக்கையில், மறவன்புலோ கிராமத்தில் விவசாயிகள் பல பிரச்சினைகளை எதிர்கொள்கின்றனர்.

அதில் முக்கியமான பிரச்சினையாக கீரைவாய்க்கால் மற்றும் மதவுப் புனரமைப்பு ஆகியன காணப்படுகின்றன.

மேற்படி வாய்க்கால் ஊடாகவே மேலதிக வெள்ள நீர் கச்சாய் கடல் நீரேரியைச் சென்றடைகின்றது.

ஆனால் இந்த வாய்க்காலினுடைய மதவு அமைப்பு அதிகளவான நீர் வழிந் தோடக்கூடிய வகையில் இல்லை. இதனால் வயல்களில் வெள்ள நீர் தேங்கி பயிர்கள் வருடா வருடம் அழிவைச் சந்திக்கின்றன.

எனவே அதிகளவான நீரைக் கடத்தக்கூடிய விதத்தில் பாலம் அமைக்கப்பட வேண்டியது அவசியமான தொன்றாகக் காணப்படுகின்றது.

இது தொடர்பில் வடக்கு ஆளுநர் மற்றும் விவசாயத் திணைக்களத்தினர் மறவன்புலோ விவசாயிகளின் நலன் கருதி வாய்க்கால் மற்றும் மதவினைப் புனரமைக்க விரைந்து நடவடிக்கை எடுக்க வேண்டுமென தெரிவித்திருந்தார். (6-8-30)

# பருத்தித்துறை மரக்கறிச்சந்தை வழக்கு 31 ஆம் திகதிக்கு ஒத்திவைப்பு

(யாழ்ப்பாணம்)

பருத்தித்துறை மரக்கறிச் சந்தை தொடர்பான வழக்கு எதிர்வரும் 31 ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

பருத்தித்துறை மரக்கறிச் சந்தையை புதிய கட்டடத்திற்கு இடம் மாற்றுவது தொடர்பில் மரக்கறி வியாபாரிகளால் பருத்தித்துறை மாவட்ட நீதி மன்றத்தில் கடந்த 16.01.2025 அன்று தாக்கல் செய்யப்பட்ட வழக்கின் பிரகாரம் நேற்று முன்தினம் வழக்கு விசாரணை இடம்பெற்றது.

இதன்போது குறித்த வழக்கு எதிர்வரும் 31 ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

குறித்த தவணையிடப்பட்ட திகதி வரைக்கும் மரக்கறிச் சந்தை வழமை போன்று தற்போது இயங்கி வருகின்ற இடத்தில் இயங்க முடியும். இந்த வழக்கில் சட்டத்தரணி வி. மணிவண்ணன் ஆயராகி இருந்தார். (6-8)

# சாரண ஆணையாளர்களுக்கான ஊடகச் செயலமர்வு கொழும்பில்

(யாழ்ப்பாணம்)

இலங்கை சாரணர் சங்கத்தின் ஏற்பாட்டில் உதவி மாவட்ட சாரண ஆணையாளர்களுக்கான (ஊடகம்) ஒரு நாள் செயலமர்வு, கொழும்பு சாரணர் தலைமைக் காரியாலயத்தில் அண்மையில் இடம் பெற்றது.

பிரதம சாரண ஆணையாளர் சட்டத் தரணி ஜனப்ரித் பெர் னாண்டோவின் வழிகாட்டலின் கீழ், தலை மைக் காரியாலய பிரதி மற்றும் உதவி ஆணை யாளர்களால் பல்வேறு பட்ட தலைப்புக்களில் இச்செயலமர்வு நடத்தப் பட்டது.



இதில் சகல மாவட்டங்களிலிருந்தும் ஊடகத் துக்குப் பொறுப்பான உதவி மாவட்ட ஆண், பெண் சாரண ஆணையாளர்கள்இதில்கலந்து கொண்டு பயிற்சிகளைப் பெற்றுக் கொண்டனர். (6-8-30)

# பனைசார் தொழிலாளர்களின் பிரச்சினைகளுக்கு விரைவில் தீர்வு

## பிரதி அமைச்சர் தெரிவிப்பு

(சாவகச்சேரி)

கூடிய விரைவில் வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் வாழ்கின்ற பனை சார்ந்த உற்பத்தியாளர்களுடைய பிரச்சினைகள் தீர்க்கப்படும் என பெருந்தோட்டப் பிரதி அமைச்சர் பிரதீப் தெரிவித்துள்ளார்.

அண்மையில் கைதடிப் பகுதிக்கு விஜயம் மேற்கொண்டு பனைசார் உற்பத்தியாளர்களுடன் கலந்துரையாடிய போதே அவர் மேற்படி தெரிவித்தார். இது தொடர்பாக மேலும் கருத்துத் தெரிவிக்கையில்

நான் ஒரு தோட்டத் தொழிலாளியின் மகன். அதனால் நானும் கஷ்டத்தை உணர்ந்தவன். எனவே வடக்கு மாகாணங்கள் உற்பத்தியாளர்களுடைய பிரச்சினைகளை எனக்கு கூற வேண்டிய தேவை இல்லை.என்னால் உணர்ந்து கொள்ள முடியும்.

தென்னிலங்கையில் பனை மரங்கள் இல்லை. வடக்கு மாகாணத்தில் தான் அதிகம் காணப்படுகின்றன.இங்குள்ள பனை சார் உற்பத்தியாளர்களுடைய பொருளாதாரத்தைக் கட்டியெழுப்ப நிச்சயமாக நடவடிக்கை எடுப்பேன் என தெரிவித்தார். (6-8-30)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 50 மெற்றிக்தொன் பேரீச்சம்பழங்களை

## இலங்கைக்கு வழங்கியது சவுதி



(கொழும்பு)

எதிர்வரும் ரமழான் நோன்பு காலத்தில் முஸ்லிம் பக்தர்களின் நுகர்வுக்காக சவுதி அரேபியா 50 மெற்றிக் தொன் பேரீச்சம்பழங்களை இம்முறை நன்கொடையாக வழங்கியுள்ளதாக தேசிய ஒருமைப்பாட்டுப் பிரதி அமைச்சர் முனீர் முளப்பர் தெரிவித்தார்.

அவற்றைப் பள்ளிவாசல்களுக்கு விநியோகிக்க தேவையான நடவடிக்கை எடுக்கப்படுமென அவர் குறிப்பிட்டார். (நி-8)

# ஆடை ஏற்றுமதி 5 வீதத்தால் அதிகரிப்பு

(கொழும்பு)

2024 ஆம் ஆண்டில் இலங்கையின் ஆடை ஏற்றுமதி 5% அதிகரித்து 4.76 பில்லியன் டொலர்களாகப் பதிவாகியுள்ளதாக ஒன்றிணைந்த ஆடைக் கைத்தொழிலாளர் மன்றம் தெரிவித்துள்ளது.

அதன்படி, அமெரிக்காவுக்கான ஏற்றுமதி 1.9 பில்லியன் டொலராகவும் ஐரோப்பிய ஒன்றியத்துக்கான ஏற்றுமதி 1.4 பில்லியன் டொலராகவும் பிரித்தானியாவுக்கான ஏற்றுமதி 675 மில்லியன் டொலராகவும் பதிவாகியுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன் ஏனைய நாடுகளுக்கான ஆடை ஏற்றுமதிகளும் 2024 ஆம் ஆண்டில் 10.13 சதவீதம் அதிகரித்து 778.4 மில்லியன் டொலர்களாகவும் பதிவாகியுள்ளது.

எவ்வாறாயினும், ஆடைத் துறையின் சிறந்த ஆண்டாகக் கருதப்படும் 2022ஐ விடவும் 2024 ஆம் ஆண்டில் ஏற்றுமதி செயற்றிறன் பின்தங்கியுள்ளதாக ஒன்றிணைந்த ஆடைக்கைத் தொழிலாளர் மன்றம் குறிப்பிட்டுள்ளது. (நி-8)

# சுவாச நோய்களால் பாதிக்கப்படும் சிறுவர்கள்


(கொழும்பு)

இலங்கையில் மூன்றில் ஒருவர் ஆஸ்துமா நோயினால் பாதிக்கப்பட்டுள்ளனர் என களுபோவில தெற்கு கொழும்பு போதனா வைத்தியசாலையின் சுவாச நோய் வைத்திய நிபுணர் ஆஷா சமரநாயக்க தெரிவித்துள்ளார்.

சுவாச நோய்கள் தொடர்பான, சர்வதேச மாநாடு குறித்த ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் இதனைத் தெரிவித்துள்ளார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

ஆஸ்துமா உள்ளிட்ட சுவாச நோய்களால் பாதிக்கப்படும் சிறுவர்கள் மருத்துவ சிகிச்சை பெறுவது அவசியம் எனவும் வீட்டில் ஒருவர் தடிமனால் பாதிக்கப்பட்டால் வீட்டில் இருக்கும் கர்ப்பிணித் தாய், குழந்தை அல்லது வயதானவர்களை அது தொற்றக் கூடும். எனவே அது தொடர்பில் வைத்திய ஆலோசனைகளை பெற்றுக்கொள்ளுமாறும் பெற்றோர்களிடம் கோரிக்கை விடுத்துள்ளார். (நி-8)

# தமிழ் எம்.பிக்கள் கனடா தூதுவர் சந்திப்பு



(கொழும்பு)

இலங்கைக்கான கனடாத் தூதுவர் டேவிட் மெக்கின்னனுக்கும் தமிழ்த் தேசியக் கட்சிகளின் பாராளுமன்ற உறுப்பினர்களுக்கும் இடையிலே முக்கிய சந்திப்பு ஒன்று இடம்பெற்றது.

இந்தச் சந்திப்பு நேற்று முன்தினம் புதன்கிழமை கொழும்பில் உள்ள கனடாத் தூதுவரின் அலுவலகத்தில் நடைபெற்றது.

இதன்போது தமிழ் மக்களின் சமகால அரசியல் விவகாரம் மற்றும் புதிய அரசமைப்பு தொடர்பில் கருத்துக்கள் பரிமாறப்பட்டன.

இதில் தமிழ் தேசிய மக்கள் முன்னணி, இலங்கைத் தமிழரசுக் கட்சி மற்றும் ஜனநாயகத் தமிழ்த் தேசிய கூட்டணி ஆகிய கட்சிகளைச் சேர்ந்த பாராளுமன்ற உறுப்பினர்கள் பங்குபற்றியிருந்தனர். (நி-8)


# வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேசசபை, கரவெட்டி சந்தைக் கடைகள் வாடகைக்கு வழங்குவதற்கான(03 வருடங்கள்) கேள்வி அறிவித்தல்-2025

வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேச சபைக்குச் சொந்தமான கடைகளை வாடகைக்கு வழங்குவதற்கான கேள்விகள் கீழ் வரும் நிபந்தனைகளுக்கு அமைவாக சபையால் கோரப்படுகின்றது.

1. கேள்விப் பத்திரம் வழங்கும் திகதி :- 2025.01.24
2. கேள்விப் பத்திரம் வழங்கும் இறுதித் திகதி :- 2025.02.05 பி.ப 3.00 மணிவரை
3. கேள்விப் பத்திரம் ஏற்கும் இறுதித் திகதி :- 2025.02.06 காலை 10.00 மணிவரை
4. கேள்விகள் திறக்கப்படும் திகதி :- 2025.02.06 காலை 10.00 மணிக்கு.
5. கேள்விப் பத்திரங்கள் இரு பிரதிகளில் தயாரிக்கப்பட்டு, கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் வாடகையின் விபரம் குறிப்பிட்டு செயலாளர், வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேச சபை, கரவெட்டி என்ற முகவரியிட்டு மூலப்பிரதியை அரக்கு முத்திரையிடப்பட்டு, கேள்வி திறக்கும் நேரத்திற்கு முன்னர் கிடைக்கக் கூடியதாக பதிவுத் தபால் மூலமாகவோ அல்லது இதற்கென அலுவலகத்தில் வைக்கப்பட்ட கேள்விப் பெட்டியினுள்ளோ கேள்வி திறக்கும் நேரத்திற்கு முன்னர் இடுதல் வேண்டும். கேள்விப் பத்திரத்தின் இரண்டாவது பிரதியை ஏக காலத்திலேயே "உள்ளூராட்சி உதவி ஆணையாளர், பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலகம், யாழ்ப்பாணம் எனும் முகவரிக்குப் பதிவுத் தபால் மூலம் விண்ணப்பதாரி அனுப்புதல் வேண்டும்.
6. கேள்விப் பத்திரங்களை பெற்றுக்கொள்ள விரும்புபவர்கள், ஆள் அடையாளத்தை உறுதிப்படுத்தும் சட்ட ரீதியான ஆவணத்தைக் கொண்டு வருவதுடன், அவ் ஆவணத்தின் நிழற்படப் பிரதியையும், கிராம அலுவலரால் வழங்கப்பட்ட வதிவிடச் சான்றிதழையும் சபைக்கு சமர்ப்பித்தல் வேண்டும். தலைமை அலுவலகத்தில் ஆள் அடையாளத்தினை உறுதிப்படுத்தி பத்திரக் கட்டணம், மீளளிக்கப்படும் வைப்புப் பணம் என்பனவற்றைச் செலுத்தி கேள்விப்படிவத்தினை பெற்றுக்கொள்ளலாம்.
7. பிரதேச சபையால் நிர்ணயிக்கப்பட்ட ஆகக் குறைந்த கேள்வித் தொகையை விட குறைந்த கேள்வித் தொகையில் விண்ணப்பிக்கும் கேள்விப்பத்திரங்கள் எதுவித முன் அறிவித்தலும் இன்றி நிராகரிக்கப்படுவதுடன், அவர்களது கேள்வி வைப்புப் பணமும் மீளளிக்கப்பட மாட்டாது.
8. கேள்வி நிபந்தனைகள், அறிவுறுத்தல்களுக்கு அமைய கேள்விப் பத்திரங்களை சமர்ப்பிக்காதுவிடின் அல்லது கேள்விப்பத்திரத்தில் ஒப்பமிடத்தவறின் காரணம் காட்டாது கேள்வி மனுவினை நிராகரிக்க பிரதேசசபையின் பெறுகைக்குழுவிற்கு பரிபூரண அதிகாரம் உண்டு.
9. கேள்விகள் திறக்கப்படும் நேரத்தில் கேள்வியாளரோ அல்லது சபையின் முன் அங்கீகாரம் பெற்று எழுத்து மூலமாக நியமிக்கப்பட்ட அவரது பிரதிநிதியோ சமூகமளிக்கலாம்.
10. பிரதேச சபையின் நாளதுவரையான கறைநிறப் பட்டியலில் ( Black List ) காணப்படும் எவருக்கும் கேள்விப் பத்திரம் வழங்கப்படமாட்டாது. அவ்வாறு தவறுதலாக தங்களால் படிவம் பெறப்பட்டதாகக் கண்டறியப்பட்டால் அக்கேள்விப்பத்திரம் எதுவித முன் அறித்தலும் இன்றி நிராகரிக்கப்படும்.
11. தெரிவு செய்யப்படும் சித்திபெற்ற கேள்விதாரர் பாதுகாப்பு வைப்புப் பணமாக தனது மாதாந்த கேள்வித் தொகையின் 12 மாத வாடகைத் தொகையை (அரசாங்கத்தினால் நிர்ணயிக்கப்படும் மேலதிக வரிகள் உட்பட) ஒரே தடவையில் முற்பணமாகச் செலுத்தி 7 நாட்களுக்குள் சபையுடன் ஒப்பந்தம் ஒன்றினைச் செய்து கொள்ள வேண்டும்.
சித்திபெற்ற கேள்விதாரர் தாங்கள் சமர்ப்பித்த கேள்வித்தொகை மற்றும் ஒப்பந்த நிபந்தனைகளிற்கு அமைய முழுக்குத்தகை காலத்திற்கும் (3 வருடம் முழுவதும்) ஒப்பந்தம் செய்த கடையினை நடாத்துதல் வேண்டும். உடன்படிக்கையிலிருந்து இடை விலக முடியாது. இடைவிலகினால் தங்களால் செலுத்தப்பட்ட பாதுகாப்பு வைப்புப்பணம் சபையினால் தங்களிற்கு மீளளிக்கப்படமாட்டாது.
இருப்பினும் ஏற்புடைய காரணங்களால் உடன்படிக்கையில் இருந்து இடைவிலக நேரிடின் விலகல் கோரிக்கையினை மூன்று மாதங்களுக்கு முன்னர் சபைக்கு சமர்ப்பித்தல் வேண்டும் என்பதுடன் காரணத்தின் அடிப்படையில் பாதுகாப்பு வைப்புப்பணம் மீளளிப்பது தொடர்பாக சபையினால் பரிசீலனை செய்ய முடியும்.
12. தங்களது ஒப்பந்தம் வலுவில் இருக்கும் காலத்தில் சபையிடம் கடையை மீள ஒப்படைக்க வேண்டிய விசேட தீர்மானமேதும் சபையால் நிறைவேற்றப்பட்டால் அத் தீர்மானத்திற்கு கட்டுப்படவேண்டிய கடப்பாடுடையவராக கருதப்படுகின்றீர். இச் சந்தர்ப்பத்தில் மூன்று மாத கால அவகாசம் சபையால் தங்களுக்கு வழங்கப்படும்.
13. தங்களால் நடாத்த உத்தேசிக்கப்படும் வியாபாரத்தின் தன்மை சபையால் பரிசீலிக்கப்பட்ட பின்னரே அனுமதி வழங்கப்படும்.
14. சபையால் தீர்மானிக்கப்படும் வியாபார வரிக்கட்டணத்தினை வருடாந்தம் செலுத்தி வியாபார அனுமதியினைப் பெற்றுக்கொள்ள வேண்டும்.
15. சமூக அமைப்புக்கள், கூட்டுத்தாபனங்கள், கூட்டுறவுச் சங்கங்கள் இக்கடைகளைப் பெற்றுக்கொள்ள விரும்பின் கேள்வி நடைமுறைகளுக்கமைவாக விண்ணப்பிக்கலாம்.
16. சமனான கேள்வித்தொகையினை ஒன்றிற்கு மேற்பட்ட கேள்விதாரர்கள் சமர்ப்பிக்கும் பட்சத்தில் வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேசசபையின் ஆளுகைக்கு உட்பட்ட பிரதேசத்தை நிரந்தர வதிவிடமாகக் கொண்டவர்களுக்கு முன்னுரிமை அளிக்கப்படும்.
17. இக்கடைகள் பிரதேச வாழ் மக்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தும் நோக்கத்திற்காக அமைக்கப்பட்டவை. ஆதலால் பிறிதொரு கடைக்கு உரிமையாளராக உள்ள கேள்விதாரருக்கு இக்கடை வழங்கப்படமாட்டாது.
18. கடைகளின் மாதாந்த வாடகைப்பணத்தை அடுத்து வரும் மாதத்தின் 10ஆம் திகதியன்று அல்லது அதற்கு முன்னர் செலுத்துதல் வேண்டும். அவ்வாறு செலுத்தத் தவறின் வாடகைப்பணத்தின் 10% இனை தண்டப்பணமாக செலுத்துதல் வேண்டும். தொடர்ந்து இரு மாதங்களிற்கு வாடகைப்பணங்களைச் செலுத்தத் தவறுவோரது ஒப்பந்தம் தன்னியல்பாகவே இரத்துச்செய்யப்பட்டதாக கருதப்படும்.
19. கடைக்கு மின்சார இணைப்பினைப் பெற்றுக்கொள்ள விரும்பின் சபையினால் உத்தேசிக்கப்படும் மாதாந்த மின் கட்டணத்தின் மூன்று மாதத்தொகையினை முற்பணமாகச் செலுத்தி சபையுடன் ஒப்பந்தம் ஒன்றினைச் செய்து கொள்ள வேண்டும். மாதாந்த மின்சாரப்பட்டியலை வாடகைதாரரே நிலுவையின்றி செலுத்துதல் வேண்டும்.
20. இந் நிபந்தனைகளுக்கு மேலதிகமாகத் தெரிவு செய்யப்பட்ட வாடகைதாரர் சபையுடன் செய்து கொள்ளும் வாடகை ஒப்பந்தத்தில் குறிப்பிடப்பட்டுள்ள நிபந்தனைகளுக்கும் கட்டுப்பட வேண்டிய பொறுப்புடையவராகின்றார்.

மேலதிக விபரங்களை அந்தந்த உப அலுவலகங்களிலும், தலைமை அலுவலகத்திலும் அறிந்து கொள்ளலாம்.

கடமை நாட்களில் அலுவலக நேரத்தில் (மு.ப. 8.30- பி.ப. 4.15) பின்வரும் தொலைபேசி இலக்கங்களுடனும் நேரடியாகவும் தொடர்பு கொண்டு தங்களுக்குத் தேவையான தகவல்களை பெற்றுக்கொள்ளலாம்.

தொடர்புக்கான தொலைபேசி இல:
தலைமை அலுவலகம் : 021 226 3271
நெல்லியடி உப அலுவலகம் : 021 226 1234
உடுப்பிட்டி உப அலுவலகம் : 021 226 1336
கட்டைவேலி உப அலுவலகம் : 021 226 1244
(கடமை நேரம் மு.ப.8.30 - பி.ப. 4.15 வரை)

கடைகளுக்கான கேள்வி அட்டவணை

| தொ.இல | கடை இல | ஆகக் குறைந்த மாத வாடகை (ரூபா) | மீளளிக்கப்படும் கேள்வி வைப்பு (ரூபா) | மீளளிக்கப்படாத கேள்விப்பத்திர கட்டணம் (ரூபா) |
|---|---|---|---|---|
| நெல்லியடி உப அலுவலகம் | | | | |
| நெல்லியடி நவீன சந்தை கடைகள் | | | | |
| 01 | இல 12 | 2,000.00 | 750.00 | 2,000.00 |
| நெல்லியடி மேல்மாடி கடைகள் | | | | |
| 02 | UF 19 | 4,000.00 | 750.00 | 2,000.00 |
| 03 | UF 20 | 4,000.00 | 750.00 | 2,000.00 |
| 04 | UF 21 | 4,000.00 | 750.00 | 2,000.00 |
| 05 | UF 26 | 3,750.00 | 750.00 | 2,000.00 |
| 06 | UF 27 | 3,500.00 | 750.00 | 2,000.00 |
| உடுப்பிட்டி உப அலுவலகம் | | | | |
| 07 | இல 07 | 2,750.00 | 750.00 | 2,000.00 |

கணேசன் கம்ஸநாதன், செயலாளர்
வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேசசபை,
கரவெட்டி.

(சி-2116)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


பாரதம்

## வதந்தியால் ஏற்பட்ட பீதி

### ரயிலில் இருந்து குதித்த பயணிகளை

# மோதித் தள்ளிய ரயில்

- 12 பேர் உயிரிழப்பு
- 7 பேர் காயம்
- மகாராஷ்டிராவில் சோகம்



(டில்லி)

மகாராஷ்டிராவின் ஜல்கான் மாவட்டத்தில் நேற்று முன்தினம் புதன்கிழமை மாலை ரயிலில் மோதி சுமார் 12 பேர் உயிரிழந்தனர்.

மேலும் இந்தச் சம்பவத்தில் சுமார் 7 பேர் காயமடைந்ததாகவும் இந்திய ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

ரயிலில் ஏற்பட்ட சந்தேகத்திற்கிடமான தீ விபத்தால் பதற்றமடைந்த புஷ்பக் எக்ஸ்பிரஸ் பயணிகள், ரயிலில் இருந்து கீழே குதித்துள்ளனர்.

இதன்போது, அடுத்துள்ள தண்டவாளத்தில் எதிர்திசையில் இருந்து வந்த கர்நாடகா எக்ஸ்பிரஸ் பயணிகள் மீது மோதியமையினால் இந்த அனர்த்தம் ஏற்பட்டுள்ளது.

லக்னோவில் இருந்து மும்பைக்கு சென்ற புஷ்பக் எக்ஸ்பிரஸ், ரயிலின் பெட்டிகளில் ஒன்றில் தீப்பிடித்ததாக வதந்தி பரவி பயணிகளிடையே பீதியை ஏற்படுத்தவே அவர்கள் கீழே குதித்ததாகத் தெரிவிக்கப்படுகிறது. (ந-8)

### தாய்வான் விவகாரத்தில்

# சீனாவுக்கு ரஷ்யா ஆதரவு கொடுக்க வேண்டும்

### சீன ஜனாதிபதி ஆலோசனை

(மொஸ்கோ)

தாய்வான் விவகாரத்தில் சீனாவிற்கு ரஷ்யா ஆதரவு கொடுக்க வேண்டும் என்று சீன ஜனாதிபதி தெரிவித்துள்ளார். கடந்த நவம்பர் 5 ஆம் திகதி நடந்த அமெரிக்க ஜனாதிபதித் தேர்தலில் வெற்றி பெற்ற டொனால்ட் ட்ரம்ப் ஜனவரி 20 அன்று பதவியேற்றார்.

அமெரிக்க ஜனாதிபதியாக பதவியேற்ற பின் உக்ரைன் போர் குறித்தும் ரஷ்யாவை கடுமையாக ட்ரம்ப் சாடியுள்ளார்.

2022 பெப்ரவரி தொடங்கி உக்ரைனில் ஏறக்குறைய சுமார் 3 ஆண்டுகளாக நடந்து வரும் போரை முடிவுக்கு கொண்டு வரும் ஒப்பந்தத்துக்கு ரஷ்ய ஜனாதிபதி புடின் இணங்க வேண்டும் என்றும் இல்லையெனில் ரஷ்யாவுக்கு பெரிய சிக்கல் ஏற்படும் என்றும் ட்ரம்ப் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

ஜனாதிபதியாக பொறுப்பேற்ற முதல் நாளில் இருந்தே ரஷ்யா, சீனாவை ட்ரம்ப் விமர்சித்துள்ளமை உலக அரசியலில் பெரும் பரபரப்பையும் ஏற்படுத்தியிருந்தது.

இந்நிலையில், 2025 ஆம் ஆண்டு சீனா - ரஷ்யாவின் உறவுகளை பலப்படுத்தும் விதமாக சீன ஜனாதிபதி ஜி ஜின்பிங் காணொளி வாயிலாக ரஷ்ய ஜனாதிபதி புடின் உடன் நேற்று முன்தினம் உரையாடியுள்ளார்.

அந்த உரையாடலில் பிரிக்ஸ் நாடுகளின் கூட்டமைப்பை வலுப்படுத்த ஒத்துழைப்பு வழங்க வேண்டும் என்றும் தாய்வான் விவகாரத்தில் சீனாவிற்கு ரஷ்யா ஆதரவு கொடுக்க வேண்டும் என்றும் சீன ஜனாதிபதி ஜி ஜின்பிங் தெரிவித்துள்ளார். (ந-8)

# ஒரு புறம் க

# மறுபுறம் ப

# மீள முடியாமல் திண

**(வோஷிங்டன்)**

**அமெரிக்காவின் கலிபோர்னியா மாக அணைக்கப் போராடி வரும் நிலைய மாகாணங்களான புளோரிடா, மிசிசிப் கடுமையான பனிப்புயல் வீசி வருகிறது முரண்பாடான தாக்குதலில் இருந்து மீ வருகிறது.**

மைனஸ் 20 டிகிரி வானிலையுடன் கடுமையான பனிப்புயல் காரணமாக அங்குள்ள முக்கிய நகரங்களை பனி மூடியது.

குறிப்பாக புளோரிடாவில் உள்ள மில்டன் நகரம் துருவ கண்டம் போல காட்சியளிக்கும் வகையில் பனிபொழிந்து வருகிறது. அங்கு 23 செ.மீற்றர் அளவில் பனிப்பொழிவு ஏற்பட்டுள்ளது.



இது கடந்த 10 ஆண்டுகளில் இல்லாத அளவு கொண்டது என அந்த நாட்டின் வானிலை ஆய்வாளர்கள் தெரிவித்துள்ளனர்.

மேலும் புளோரிடா, மிசிசிப்பி, லூசியானா உள்ளிட்ட மாகாணங்களில் உள்ள நகரங்களில் 20 செ.மீற்றருக்கும் அதிகமான பனிப்பொழிவு பதிவாகி உள்ளதாக அந்த நாட்டின் வானிலை

# லொஸ் ஏ

# மீண்டும் ப

## 31 ஆயிரம் பே

(வோஷிங்டன்)

அமெரிக்காவின் லொஸ் ஏஞ்சல்ஸ்'க்கு வடக்கில் பரவிய ஒரு புதிய காட்டுத் தீயானது 9,400 ஏக்கருக்கும் அதிகமாக பரவியது.

பலத்த காற்று மற்றும் உலர் மரங்களால் தூண்டப்பட்ட காட்டுத் தீ 31,000 இற்கும் மேற்பட்ட மக்களை அவர்களின் சொந்த இடங்களிலிருந்து வெளியேற்றும் உத்தரவுகளை கட்டாயப்படுத்தியது.

நேற்று முன்தினம் புதன்கிழமை காலை லொஸ் ஏஞ்சல்ஸ் நகரின் வடமேற்கே 45 மைல் தொலைவில், பல குடியிருப்புப் பகுதிகள் மற்றும் பாடசாலைகளை அண்மித்துள்ள மலைப் பகுதியில் உள்ள காஸ்டைக் ஏரிக்கு அருகில் ஹியூஸ் தீ மூண்டது.

இந்தத் தீப்பரவலினால் வீடுகள் அல்லது வணிகங்கள் எதுவும் சேதமடையவில்லை, மேலும் தீயை கட்டுக்குள் கொண்டு வருவது குறித்து தீயணைப்பு அதிகாரிகள் நம்பிக்கை தெரிவித்தனர்.

சுமார் 31,000 பேர் கட்டாய வெளியேற்ற உத்தரவுகளின் கீழ் உள்ளனர் என்றும் லொஸ் ஏஞ்சல்ஸ் அதிகாரிகள் தெரிவித்தனர்.

அதேநேரம், ஏஞ்சல்ஸ் தேசிய வனமானது சான் கேப்ரியல் மலைகளில் உள்ள அதன் 700,000 ஏக்கர் பூங்கா மூடப்பட்டுள்ளதுடன் வேகமாக நகரும் தீயை எதிர்பார்த்து போராடுவதற்காக தெற்கு கலிபோர்னியாவைச் சுற்றி சுமார் 1,100 தீயணைப்பு வீரர்கள் நிறுத்தப்பட்டதாகவும் மாநில

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காட்டுத் தீ!

# பனிப்புயல்!


# ணறும் அமெரிக்கா!

ா மாகாணத்தில் பரவிய காட்டுத்தீயை திலையில் அமெரிக்காவின் தெற்கு சிசிப்பி, லூசியானா உள்ளிட்டவற்றில் நகிறது. இயற்கை அன்னையின் இந்த ந்து மீள முடியாமல் அமெரிக்கா திணறி

ஆய்வாளர்கள் தெரிவித்துள்ள னர்.

முன்னெச்சரிக்கை நடவடிக் கையாக புளோரிடா, லூசியானா மாகாணங்களில் அவசரநிலை பிரகடனப்படுத்தப்பட்டது.

இதனால் அந்த நாட்டின் பாட சாலை, கல்லூரிகள் மூடப் பட்டன, வீதி மற்றும் ரயில் போக்கு வரத்து பொதுச்சேவை குறைக் கப்பட்டது. ஹவுஸ்டன்,



கூல்ப் போர்ட், டல்லாயாசி, மொபில் உள்ளிட்ட நக ரங்களில் உள்ள விமான நிலையங்கள் மூடப்பட் டன.

இதனால் 2 ஆயிரம் விமானங்கள் இரத்தா கின. அமெரிக்காவில் பனிப் புயல் காரணமாக ஏற்பட்ட விபத்துகளில் சிக்கி 10 பேர் பலியாகினர். 3 கோடி மக்களின் இயல்பு வாழ்க்கை முற்றாக பாதிக் கப்பட்டுள்ளது. (நி-8)

## ஏஞ்சல்ஸ் அருகே
## ் பரவிய காட்டுத்தீ
## ம் பேர் வெளியேற்றம்




வனவியல் மற்றும் தீ பாதுகாப்புத் துறை தெரிவித்துள்ளது.

இது தவிர 4,000 இற்கும் மேற்பட்ட தீயணைப்பு வீரர்கள் ஹியூஸ் தீயை அணைக்கும் பணியில் ஈடுபட்டுள்ளனர் என்று லொஸ் ஏஞ்சல்ஸ் கவுண்டி தீயணைப்புத் தலைவர் ஆண்டனி மர்ரோன் தெரிவித்துள்ளார்.

இந்த மாத தொடக்கத்தில் லொஸ் ஏஞ்சல்ஸ் பகுதியில் பல சுற்றுப்புறங்களை அழித்து எரிந்து கொண்டி ருக்கும் பெரிய காட்டுத் தீக்கு மத்தியில் இந்தத் தீப்பரவல் ஏற்பட்டுள்ளமை குறிப்பி டத்தக்கது. (நி-8)

## அமெரிக்க பாடசாலையில் துப்பாக்கிச் சூடு- இருவர் பலி




(வோஷிங்டன்)

அமெரிக்காவின் நாஸ் வில் பகுதியில் பாடசாலை யொன்றில் இடம்பெற்ற துப் பாக்கிச் சூட்டுச் சம்பவத்தில் இரு மாணவர்கள் கொல லப்பட்டுள்ளனர்.

தென்நாஸ்வில் பகுதியில் உள்ள அன்டியோச் பாடசா லையில் இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

பாடசாலையின் உணவு விடுதியில் 17 வயதான மாணவன் இரு மாணவர் கள் மீது துப்பாக்கிப் பிர யோகத்தை மேற்கொண்ட பின்னர் தன்னைதானே தனது கைத்துப்பாக்கியால் சுட்டு உயிரிழந்தார் என பொலிஸார் தெரிவித்துள் ளனர். காயமடைந்த இரு மாணவர்களில் ஒருவர் உயிரிழந்துள்ளதுடன் மற் றொருவர் மருத்துவமனை யில் அனுமதிக்கப்பட்டுள் ளார். (நி-8)

## ஒரு வருடத்தின் பின் விடுவிக்கப்பட்ட இஸ்ரேல் கப்பல்




(காசா)

ஹவுதி படையினரால் சிறைப்பிடிக்கப்பட்ட இஸ்ரேல் வணிகக் கப்பல் ஓராண் டுக்குப் பிறகு விடுவிக்கப்பட் டுள்ளது.

காசாவில் ஹமாஸ் படை யினரை எதிர்த்து இஸ்ரேல் இராணுவம் ஒன்றரை ஆண்டுகளாக தாக்குதல் நடத்தி வந்தது. இதற்கு எதிர்ப்பு தெரிவித்து, ஈரான் ஆதரவு படைகளான ஹிஸ் புல்லா அமைப்பினர் செங் கடலிலும் ஹவுதி படையி னர் ஏமன் வளைகுடா கடல் பகுதியிலும் இஸ்ரேலுக்கு எதிராக பல்வேறு நடவடிக் கைகளில் ஈடுபட்டு வந்தனர். அந்தக் கடல் வழியாக வந்த கப்பல்கள் மீது தாக்குதல் நடத்தியும் சிறைப்பிடித்தும் வந்தனர்.

அந்த வகையில், கடந்த 2023 ஆம் ஆண்டு நவம் பர் 19 ஆம் திகதி கேலக்ஷி லீடர் எனும் இஸ்ரேலின் வணிகக் கப்பலை ஹவுதி படையினர் சிறைப்பிடித்த னர். அத்துடன் அதில் இரு ந்த பல்கேரியா, உக்ரைன், ரோமன், மெக்சிக்கோ உள் ளிட்ட நாடுகளைச் சேர்ந்த 25 பேர் கொண்ட குழுவி னரையும் சிறைப்பிடித்தனர்.

தற்போது, இஸ்ரேல் - ஹமாஸ் இடையே போர் நிறுத்த ஒப்பந்தம் கையெ முத்தாகிய நிலையில், கேல க்ஷி லீடர் கப்பலை விடுவிப்ப தாக ஹவுதி படையினர் அறிவித்துள்ளனர்.

இது குறித்து ஹவுதி சுப்ரீம் கவுன்சில் வெளி யிட்டுள்ள அறிக்கையில், "பாலஸ்தீனத்தில் போர் நிறுத்தத்திற்கு ஆதரவு தெரி விக்கிறோம் எனவும் காசா போரின் போது கடந்த 2023 ஆம் ஆண்டு சிறைப்பிடிக் கப்பட்ட கேலக்ஷி லீடர் குழுவினரையும் விடுவிக்கி றோம்" எனவும் கூறப்பட்டுள் ளது. (நி-8)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இன்று ஒரு தகவல் 307

தென்கச்சி.கோ.சுவாமிநாதன்

## நிர்வாக நுணுக்கங்கள்

ஒரு அலுவலகத்தில் வேலை பார்க்கின்ற ஒருவர் ஏதோ தவறு செய்து விட்டார். உடனே மேலதிகாரி அவரைக் கூப்பிட்டார். நீங்கள் செய்தது தவறு என்றார் கோபமாக. இது ஒரு ரகம்.சில அதிகாரிகள் இப்படி நீங்கள் செய்தது தவறு என்று சொல்வதில்லை. நீங்கள் செய்தது சரியில்லை என்று நான் நினைக்கின்றேன் என்று சொல்லுவார்கள்.

இரண்டும் அர்த்தம் ஒன்று தான். இருந்தாலும் வார்த்தைகள் வித்தியாசம். நிர்வாகத் திறமை இல்லாத ஒரு அதிகாரி You are wrong என்று சொல்வாரா? நிர்வாகத் திறமை உள்ள அதிகாரியாக இருந்தால் அதையே கொஞ்சம் மாற்றி I thing you are not correct என்பாராம். இது தான் வித்தியாசம்.

இருந்தாலும் வார்த்தைகளை உபயோகப்படுத்துகின்ற விதத்தை வைத்து தான் வேலை நன்றாக நடக்கின்றதும் நடக்காமலிருப்பதும்.விபரம் தெரிந்தவர்கள் என்ன சொல்லுவார்கள் என் றால் Be a leader not a boss என்பார்கள்.ஒரு leader ஆக இருங்கள் boss ஆக இருக்காதீர்கள். சரி அப்படி என்றால் leader இற்கும் ஒரு boss இற்கும் வித்தியாசம் இருக்கிறதா? இருக்கிறது.

ஒரு leader எப்படி நடந்து கொள்ளுவார். ஒரு boss எப்படி நடந்து கொள்ளுவார்?இதை முதலில் நாம் தெரிந்து கொள்ள வேண்டும்.

அவர்கள் எப்படி நடந்து கொள்ளுவார்கள் என்பதற்கு சில விபரங்கள் இருக்கிறது. அதைச் சொல்லுகிறேன் கேட்டு வைத்துக் கொள்ளுங்கள்.boss என்பவர் விரட்டிக் கொண்டேயிருப்பார்.leader என்பவர் ஊக்கப்படுத்திக் கொண்டேயிருப்பார். நாளைக்கு மாலை நேரத்திற்குள் அந்த வேலையைச் செய்து முடிக்கவில்லை என்றால் தொலைத்து விடுவேன் என்பார் அவர்.

இதுவரைக்கும் நீங்கள் செய்திருக்கும் வேலை மிகவும் அற்புதம் சார்! அப்படி என்பார் இவர்.

boss என்பவர் அதிகாரத்தை நம்பி செயற்படுவார். leader என்பவர் நல்ல எண்ணத்தை நம்பி செயற்படுவார்.எங்களிடம் அதிகாரம் இருக்கிறது. power இருக்கிறது அதனாலே காரியத்தைச் சாதித்து விடலாம் என்று நினைக் கின்றவர் அவர்.

மற்றவர்களிடம் ஒரு நல்ல அபிப்பிராயத்தை சம்பாதித்துவிட்டு அதன் முலமாக காரியங்களை சாதிக்கிறவர் இவர்.boss என்பவர் பயத்தை உண்டு பண்ணுவார்.

leader என்பவர்அன்பை பரவச் செய்வபவர்.அதைச் செய்யவில்லை என்றால் ஓடிற் இல் தகறாறாகிவிடும். இதைச் செய்யவில்லை என்றால் இன்கிரிமென்ற் இல்லாமல் போய்விடும். இப்படி ஏதாவது சொல்லி பயமுறுத்திக் கொண்டிருப்பவர் boss.

leaderஅப்படி இல்லை. உடம்பு எப்படி இருக்கிறது. வீட்டிலே எல்லோரும் நலமாக இருக்கிறார்களா? அலுவலகத்தில் எல்லா வசதியும் இருக்கிறதா. நாம் ஏதாவது உதவி செய்ய வேண்டும் என்று அன்புக்கு முக்கியத்துவம் கொடுப்பார்.boss என்பவர் எதற்கெடுத்தாலும் நான் நான் என்று சொல்லிக் கொண்டு இருப்பார். leader என்பவர் நாம் நாம் என்று சொல்லிக் கொண்டு இருப்பார். boss என்பவர் தவறுக்கு காரணம் யார் என்று பார்ப்பார் leader என்பவர் தவறு என்ன என்று பார்ப்பார்.

The boss shows who is wrong! The Leader shows what is wrong இந்த காரியம் எப்படிச் செய்யப்பட்டுள்ளது என்று தெரிந்திருப்பார் boss. இந்தக் காரியத்தை எப்படி செய்ய வேண்டும் என்று செய்து காட்டுவார் leader.செய்கின்ற வேலையை ஒரு சுமையாக நினைக்க வைப்பவர் boss. செய்கின்ற வேலையை சந்தோசமான விடயமாக ஆக்கு பவர் leader.ஒரு முதலாளியாக இருக்கிறவர் அல்லது ஒரு நிர்வா கியாக இருக்கிறவர் இது மாதிரியான நுணுக் கங்களைத் தெரிந்து வைத்திருக்கிறது நல்லது.

ஒரு boss இருந்தார். அவர் ஒரு நாள் மிகவும் பெருமையாக தன்னுடைய அலுவலகத்தைப் பற்றி பேசிக் கொண்டிருந்தார். எனக்கு கீழே 200 பேர் வேலை செய்கிறார்கள் சார்! நான் ஒரு கோடு கிழித்தால் அவர்கள் அதைத் தாண்டாத அளவுக்கு நான் நடத்துகிறேன் சார் அப்படி என்றார் அவர்.

அது எப்படி முடிகிறது உங்களாலே? என்று கேட்டேன். நான் கோடே கிழிக்கிறது இல்லை சார் என்றார்.

# சிப்பிகளும் ஓடுகளும் எவ்வாறு உருவாகின்றன?



படம் 1: இருவால்விகள் மற்றும் கஸ்ட்ரோ போடாக்கள்

கடற்கரையில் நடந்து கொண்டே வண்ண வண்ண சிப்பிகளையும் ஓடுகளையும் சேகரித்திருக்கிறீர்களா? அவற்றின் அழகை பார்த்து வியக்காதவர்கள் யாரும் இல்லை என்று தான் கூறலாம். இவை எங்கிருந்து எவ்வாறு உருவாக்கப்படுகின்றன என்று சற்று சிந்தியுங்கள். அது ஒரு அங்கியின் கட்டமைக்கப்பட்ட அரண், பாதுகாப்பிற்காக சிற்பமாக்கப்பட்ட அமைப்பாகும். ஆம், விலங்கு ராஜ்ஜியத்தில் பல்வகைமை கொண்ட சுமார் ஒரு இலட்சத்திற்கும் மேலாக விவரிக்கப்பட்ட இனங்களை உள்ளடக்கிய மெல்லுடலிகளான மொலஸ்க்காக்கள் மூலமே இக் கடினமான அமைப்பு உருவாக்கப்படுகின்றது.

மொலஸ்க்காக்களில் பல்வேறு வகையான ஓடுகள் (Shells) உள்ளன. அவை இருவால்விகள் (Bivalves) மற்றும் கஸ்ட்ரோபோடாக்களாகும் (Gastro pods). மஸ்ஸல்(Mussles), கிளாம்ஸ் (Clams) மற்றும் ஸ்கால்ப்ஸ் (Scallops) ஆகியன இரண்டு வால்வுகளால் செய்யப்பட்ட ஓடுகள் இருவால்விகள் எனப்படும். இவை பெரும்பாலும் சமச்சீராக காணப்படும். நத்தை வடிவமானவை (Snails), லிம்பெட்ஸ் (Limpets), பெரிவிங்கிள்ஸ் (Periwinkles) மற்றும் கவுரி (Cowries) போன்றவை கஸ்ட்ரோ போடாக்களில் உள்ளடங்கும்.

ஒவ்வொரு வெற்று ஓடுகளும் ஒரு காலத்தில் மெல் லுடலை மறைக் கப் பயன்பட்ட ஒரு பாதுகாப்பு இல்லமாக இருந்திருக்கும். அவ் அங்கிகளின் இழையங்களில் வெளிப்புற அடு க்கை கொண்டு காணப்படும் அமைப்பானது மன்டில் (Mantle) என்று அழைக்கப்படும். அந்த அடுக்குகள் மெல்லுடல்களை ஓடுகளுடன் இணைக்கின்றது. மன்டிலிலுள்ள சிறப்பு கலங்கள் மூலம் புரதங்கள் மற்றும் கனியுப்புக்களை பயன்படுத்தி கடின உறை உருவாக்கப்படுகின்றது.



படம்2 : ஓடுகளின் கட்டமைப்பு உருவாக்கம்


இவை சுரக்கப்பட்டு வெளிப்புறக் கலங்களில் காணப்படும் இடைவெளிகளை நிரப்புவதன் மூலம் கடினமான ஓடுகளின் கட்டமைப்பு உருவாக்கப்படுகின்றது. மொலஸ்க்காக்கள் 95% முதல் 99% வரை கனியுப்பு உள்ளடக்கத்தையும் மீதமுள்ள 1% முதல் 5% சேதனப் பொருட்களையும் கொண்டிருக்கலாம். அதில் 95% முதல் 99% முதன்மை இரசாயனக்கூறாக கல்சியம் கார்பனேட்டு ($CaCO_3$) அமைகிறது. அத்துடன் புரதங்களே குறிப்பிட்ட பகுதியை கட்டமைப்பதற்குரிய குறிப்பிட்ட கனியுப்புகள் எது என்பதை தீர்மானிக்கின்றன.

வலுவான பிணைப்பை உருவாக்குவதன் மூலம் ஓடுகளில் காணப்படும் இடைவெளிகளை முற்றாக நிரப்பப்பயன்படுகிறது. கல்சியம் கார்பனேற்று இரண்டு வெவ்வேறு வகை படிகங்களை உருவாக்கலாம். கல்சைட்டு மற்றும் அரக்கோனைட்டு ஆகும். இவ்விரண்டு படிகங்களும் கடல் வாழ் மெல்லுடலிகளின் ஓடுகளில் காணப்படுகின்றது. வெவ்வேறு அடுக்குகளுக்கு வெவ்வேறு புரதங்களை சுரக்கின்றன. வெவ்வேறு புரதங்கள் கல்சியம் கார்பனேற்றை வெவ்வேறு வழிகளில் படிகமாக்கின்றன.

## யாழ்ப்பாண விஞ்ஞான சங்க A பிரிவு

மொலஸ்காக்களில் பல வகைகள் உள்ளன. மேலும், உலகெங்கிலும் உள்ள பல்வேறு கடற்கரையோரங்களில் பல்வேறு வகையான ஓடுகளைக் காணக்கூடியதாக உள்ளது. இதற்கு மொலஸ்காக்களின் பல்வேறு வகையான உணவுப்பழக்கங்களே காரணமாகும். அவை உள்ளெடுக்கும் தண்ணீர் மற்றும் உணவில் இருந்து அத்தியாவசியப் பொருட்களை உறிஞ்சுகின்றன. கல்சியம் போன்ற தாதுக்கள் பெரும்பாலும் அவற்றைச் சுற்றியுள்ள நீரில் இருந்து பெறப்படுகின்றன.

உதாரணமாக, வெப்பமண்டல நீர் மொலஸ்காக்களுக்கு அதிக உணவு ஆதாரங்கள் உள்ளன. இதன் விளைவாக, வெப்பமண்டல மொலஸ்காக்கள் மிகவும் வண்ணமயமான ஓடுகளைக் கொண்டுள்ளன, ஏனெனில் வெவ்வேறு உணவுகள் வெவ்வேறு வகையான நிறங்களை வழங்குகின்றன.




படம்3 : மஸ்ஸலில் கல்சைட் மற்றும் அரகோனைட் வளர்ச்சி

குளிர்மண்டல நீர் மொலஸ்காக்கள் குறைவான உணவு ஆதாரங்களையே தங்கியிருப்பதால் இருண்ட நிறங்களையுடைய ஓடுகளை கொண்டுள்ளன. மெல்லுடலிகள் வளரும்போது அதன் ஓடுகளும் அதனுடன் சேர்ந்து வளர்கின்றன இவ் வங்கிகள் இறக்கும் போது ஓடுகள் தனித்து விடப்படுகின்றது. இவையே கடற்கரையை அலங்கரிக்கும் வண்ண சிப்பிகளும் ஓடுகளும் ஆகும்.

உவேந்திகா சிவானந்தம்,
போதனாசிரியர் (ஒப்பந்த அடிப்படை),
இலங்கை சமுத்திரப் பல்கலைக்கழகம்,
பிராந்திய நிலையம், மட்டக்களப்பு.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# கிளிநொச்சியில் வர்த்தகர்கள் கதவடைப்பு போராட்டம்

## மகஜரும் கையளிப்பு

(கிளிநொச்சி)

**வெளிமாவட்ட நடைபாதை வியாபாரிகளால் தமது வாழ்வாதாரம் பாதிப்படைவதாகத் தெரிவித்து கிளிநொச்சி வர்த்தகர்கள் கதவடைப்பு மற்றும் கவனயீர்ப்பு போராட்டத்தில் நேற்று ஈடுபட்டனர்.**



கிளிநொச்சி நகரத்தில் வெளிமாவட்ட நடைபாதை வியாபாரிகளுக்கு அனுமதிகளை வழங்கியுள்ளதால் தங்களுடைய வியாபார நடவடிக்கைகள் முற்று முழுதாக பாதிக்கப்பட்டிருப்பதாக தெரிவித்து வர்த்தகர்கள் நேற்றுக்காலை 9 மணிக்கு கிளிநொச்சி டிப்போ சந்தியில் இருந்து மாவட்ட செயலகம் வரை குறித்த கண்டன பேரணியை முன்னெடுத்து இருந்தனர்

"வேண்டாம் வேண்டாம் கிளிநொச்சிக்கு மெகா சேல் வேண்டாம்", "2500 இற்கு மேற்பட்ட பணியாளர்களின் வாழ்வாதாரத்தை அளிக்காதே" போன்ற வாசகங்களை எழுதிய பதாகைகளை ஏந்திய வாறு போராட்டத்தில் ஈடுபட்டனர். பேரணியின் இறுதியில் கிளிமாவட்ட பதில் அரச அதிபர் மற்றும் வடக்கு மாகாண ஆளுநர் ஆகியோருக்கு தமது கோரிக்கை அடங்கிய மகஜர் ஒன்றினையும் கையளித்திருந்தனர். (6-8-315-316)

# பிடியாணை பிறப்பித்த நிலையில் தலைமறைவான தம்பதிகள் கைது

## 14 நாட்கள் விளக்கமறியலில்

(குருமன்காடு)

32 பிடியாணைகள் பிறப்பிக்கப்பட்ட நிலையில் வவுனியாவில் மறைந்திருந்த தம்பதியினரை பொலிஸார் கைது செய்து நீதிமன்றில் முற்படுத்தப்பட்ட நிலையில் 14 நாட்கள் விளக்கமறியலில் வைக்க வவுனியா நீதிமன்றம் நேற்று முன்தினம் உத்தரவு பிறப்பித்துள்ளது.

இச் சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது, ருமேனியாவிற்கு வேலைக்கு அனுப்புவதாகக் கூறி சுமார் 30 மில்லியன் ரூபாய் மோசடி செய்ததாக ஒரு தம்பதியினருக்கு எதிராக மட்டக்களப்பு, ஏறாவூர் பொலிஸாருக்கு முறைப்பாடு செய்யப்பட்டிருந்தது.

விசாரணையின் போது 28 இற்கும் மேற்பட்ட நபர்களை வெளிநாடுகளுக்கு அனுப்புவதாக வாக்குறுதி அளித்து நிதி மோசடி செய்திருப்பதும் தெரிய வந்துள்ளது.

இதனையடுத்து அவர்கள் 30 மில்லியன் ரூபாய் நிதியை மோசடி செய்ததாக மேற்கொள்ளப்பட்ட வழக்குக்கு அமைய ஏறாவூர் நீதிமன்றத்தால் குறித்த கணவனுக்கு எதிராக 16 பிடியாணைகளும் மனைவிக்கு எதிராக 16 பிடியாணைகளும் ஆக 32 பிடியாணைகள் பிறப்பிக்கப்பட்டிருந்தது.

இந்நிலையில், குறித்த தம்பதியினர் மட்டக்களப்பில் இருந்து வெளியேறி வவுனியா, தோணிக்கல் பகுதியில் உள்ள வீடொன்றில் மறைந்திருந்த நிலையில் வவுனியா பொலிஸாருக்கு கிடைத்த தகவலையடுத்து வவுனியா சிறப்புத் தனிப்படை பொலிஸாரினால் தோணிக்கல் பகுதியில் சுற்றி வளைப்பை மேற்கொண்டு குறித்த தம்பதியினரை கடந்த செவ்வாய்க்கிழமை கைது செய்திருந்தனர்.

கைது செய்யப்பட்ட தம்பதியினர் 55, 48 வயது உடையவர்களாவர். மேலதிக விசாரணைகளின் பின் குறித்த இருவரையும் வவுனியா நீதிமன்றில் முற்படுத்திய நிலையில் 14 நாட்கள் விளக்கமறியலில் வைக்க மன்று உத்தரவிட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். (6-8-250)

# அறுவடைக்கு தயாராக இருந்த 40 ஏக்கர் வயல் நிலங்கள் பாதிப்பு

(குருமன்காடு)

வவுனியா மாவட்டத்தில் நிலவும் தொடர் மழை காரணமாக செட்டிக்குளம், ஆண்டியாபுளியங்குளம், ராமையன் குளம் பகுதியில் சுமார் 40 ஏக்கர் வயல் நிலங்கள் வெள்ளத்தில் மூழ்கியுள்ளன.

குறிப்பாக வவுனியா பாவற்குளம் குளத்தின் நான்கு வான் கதவுகள் திறக்கப்பட்டுள்ள நிலையில் அந்த நீர் வழிந்தோடும் பகுதியின் கீழுள்ள வயல் நிலங்களே இவ்வாறு பாதிப்படைந்துள்ளன.

மேலும் அறுவடைக்கு தயாராக இருந்த நிலையில் நெற்பயிர்கள் முற்றாகப் பாதிக்கப்பட்டுள்ளதாகவும் வெள்ளநீர் தொடர்ச்சியாக பயிர்களுக்கு மேலாக மூடி பாய்ந்து வருவதாகவும் இதனால் தமது விவசாயம் முற்றாகப் பாதிக்கப்பட்டுள்ளதுடன், தமது வாழ்வாதாரம் கேள்விக்குறியாகியுள்ளதாகவும் விவசாயிகள் கவலை தெரிவித்தனர். (6-8-250)




# தொலைத் தொடர்பு வயர்கள் அறுப்பு

## பொலிஸில் முறைப்பாடு

(யாழ்ப்பாணம்)

வடமராட்சி கரவெட்டி கரணவாய் பகுதியில் தொடர்ச்சியாக இலங்கை தொலைத் தொடர்பு சேவைக்குரிய வயர்கள் திருடர்களால் அறுத்து எடுக்கப்பட்டு வருவதாக பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. இந்த சம்பவங்கள் தொடர்பில் இதுவரை 8 முறைப்பாடு கள் நெல்லியடி பொலிஸ் நிலையத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளதாகவும் ஆனால் இதுவரை எவரும் கைது செய்யப்படவில்லை எனவும் தெரிவிக்கப்படுகிறது. (6-8)

# வவு.குடிவரவு குடியகல்வு அலுவலகம் வெள்ளத்தில்



(குருமன்காடு)

வவுனியாவில் நேற்று முன்தினம் பெய்த கனமழை காரணமாக குடிவரவு குடியகல்வு திணைக்களத்தின் பிராந்திய அலுவலகம் வெள்ளத்தில் மூழ்கியதால் அதன் செயற்பாடுகள் பாதிப்படைந்திருந்தன.

வவுனியா குடிவரவு குடியகல்வு பிராந்திய அலுவலகத்திற்குள் வெள்ள நீர் புகுந்தமையினால் அதன் கடவுச்சீட்டு விநியோக செயற்பாடுகள் பாதிப்படைந்துள்ளதுடன், அலுவலகத்தில் கடமையாற்றுவோர் வெள்ளத்திற்குள் நின்று தமது செயற்பாடுகளை முன்னெடுக்க வேண்டிய நிலையும் ஏற்பட்டிருந்தது.

இதனையடுத்து, குறித்த நீரை வெளியேற்றுவதற்கு அலுவலக உத்தியோகத்தர்கள் நடவடிக்கைகளை முன்னெடுத்து இருந்தமை குறிப்பிடத்தக்கது. (6-8-250)

# பெரியகுளம்-புளியம்பொக்கணை வீதியை ஊடறுத்து பாயும் வெள்ளம்

## போக்குவரத்து செய்வதில் மக்கள் நெருக்கடி



(தருமபுரம்)

வட்டக்கச்சி பெரியகுளம் பகுதியில் இருந்து புளியம்பொக்கணை செல்லும் பிரதான வீதியை வெள்ளம் ஊடறுத்து பாய்வதன் காரணமாக போக்குவரத்து செய்யும் மக்கள் சிரமத்திற்கு உள்ளாகினர்.

நிலவுகின்ற மழையுடனான காலநிலை காரணமாக நீர்வரத்து அதிகரித்தமையால் குறித்த வீதியை ஊடறுத்து வெள்ளம் பாய்வதால் பாடசாலை செல்லும் மாணவர்கள், பயணிப்போர் அவ்வீதியினை கடக்கும் போது சிரமங்களை எதிர்கொண்டனர்.

இரணைமடுக்குளத்தின் அனைத்து வான்கதவுகளும் திறக்கப்பட்டதையடுத்து ஐயன் கோயிலடி, ஊரியான், பெரியகுளம், கண்டாவளை ஆகிய பகுதிகளில் அறுவடைக்கு தயாராக இருந்த நெல் வயல்களும் சேதமடைந்துள்ளது.

அதேவேளை நீர்வரத்து அதிகரிப்பின் காரணமாக முதலைகள் மக்கள் குடியிருப்புக்குள் புகுந்து அச்சத்தை ஏற்படுத்துவதாகவும் மக்கள் தெரிவித்தனர். (6-316)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்கியின் பாகம் - 3

# பொன்னியின் செல்வன்

காவியத் தொடர் 688





காலாமுகன் சிரித்தான். "அதை நீ சொல்ல வேண்டாம்" எங்களுக்கே தெரியும். இளவரசன் அருள்மொழி வர்மனைச் சந்திப்பதற்குத் தான் நீ புறப்பட்டாய்! அவன் எங்கே ஒழிந்திருக்கிறான் என்று சொல்லிவிடு. உன்னை ஒன்றும் செய்யாமல் விட்டுவிடுகிறோம்" என்றான்.

"நீங்கள் என்ன வேண்டுமானாலும் செய்து கொள்ளுங்கள். என்னிடமிருந்து எந்த விபரமும் நீங்கள் தெரிந்து கொள்ள முடியாது" என்று வானதி அழுத்தம் திருத்தமாய்க் கூறினாள்.

"உன்னை என்ன வேணுமானாலும் செய்து கொள்ளலாம் என்றா சொல்கிறாய்? நாங்கள் செய்யப்போவதும் என்னவென்று அறிந்தால் இப்படிச் சொல்லத் துணியமாட்டாய்!" "என்ன செய்யப்போகிறீர்கள்? அதையும் சொல்லிப் பார்த்து விடுங்கள்!"

"முதலில் உன் அழகான பூப் போன்ற கரங்களில் ஒன்றை இந்தத் தீவர்த்திப் பிழம்பில் வைத்துக் கொளுத்துவோம். பிறகு இன்னொரு கையையும் கொளுத்துவோம். பின்னர் உன் கரிய கூந்தலில் தீவர்த்தியைக் காட்டி எரிப்போம்

"நன்றாகச் செய்து கொள்ளுங்கள். இதோ என் கை! தீவர்த்தியை அருகில் கொண்டு வாருங்கள்!" என்றாள் வானதி. இராஜ்யத்தில் நடந்து வந்த சூழ்ச்சிகள், சதிகள் எல்லாம் வானதிக்குத் தெரிந்துதானிருந்தன.

'இந்தத் துஷ்டர்கள், சதிகாரர்களின் ஆட்களாயிருக்க வேண்டும். இளவரசர் இருக்குமிடத்தைக் கண்டுபிடிக்கப் பார்க்கிறார்கள். அவருக்குக் கெடுதி செய்யும் நோக்கத்துடனே தான் இருக்க வேண்டும். இளவரசருக்காக அவருடைய பாதுகாப்புக்காக நான் இத்தகைய கொடூரங்களை அனுபவிக்கும்படி நேர்ந்தால் அதைக் காட்டிலும் பெரிய பாக்கியம் என்ன இருக்கிறது?' இவ்வாறு எண்ணினாள் கொடும்பாளூர் இளவரசி வானதி. அந்த எண்ணம் தான் அவளுக்கு அத்தகைய மனோதைரியத்தை அளித்தது.

"பெண்ணே! யோசித்துச் சொல்! வீண் பிடிவாதம் வேண்டாம். பிறகு வருத்தப்படுவாய்! உன் ஆயுள் உள்ள வரையில் கண் தெரியாத குருடியாயிருப்பாய்!" என்றான் காலாமுகன்.

"என்னை நீங்கள் அணுஅணுவாகக் கொளுத்துங்கள் என் சதையைத் துண்டு துண்டாக வெட்டுங்கள். ஆனாலும் என்னிடமிருந்து ஒரு விபரமும் அறிய மாட்டீர்கள்?" என்றாள்.

"அப்படியானால் எங்களுடைய காரியத்தைப் பார்க்க வேண்டியதுதான்! சீடா! கொண்டுவா அந்தத் தீவர்த்தியை இங்கே!" என்றான் காலாமுகன்.

அச்சமயம் வானதியின் கவனம் சற்றுத் தூரத்தில் சென்றது. யானைகள், குதிரைகள், காலாட்படைகள், பல்லக்குகள் முதலியன அடங்கிய நீண்ட ஊர்வலம் ஒன்று அவர்கள் இருந்த இடத்தை நெருங்கி வந்து கொண்டிருப்பதைப் பார்த்தாள். தெய்வத்தின் அருளால் தனக்கு ஏதோ எதிர்பாராத உதவி வருகிறது என்று எண்ணினாள்.

"ஜாக்கிரதை! அதோ பாருங்கள்!" என்று சுட்டிக் காட்டினாள். காலாமுகன் மறுபடியும் சிரித்தான். "வருகிறது யார் என்று உனக்குத் தெரியுமா?" என்று கேட்டான்.

"முதன்மந்திரி அநிருத்தர் மாதிரி இருக்கிறது. நான் இப்போது கூச்சல் போட்டால் அவர்களுக்குக் காது கேட்கும். ஜாக்கிரதை! என்னை விட்டுவிட்டு ஓடிப் போய் விடுங்கள்! இல்லாவிட்டால்" என்றாள் வானதி.

(தொடரும்)



# சிறுவர் அரங்கம்



## நம்பிக்கை



ஒரு ஊரில் நல்லவன் ஒருவன் இருந்தான். எப்பொழுதும் தன்னால் இயன்ற வரை மற்றவர்களுக்கு உதவுவது அவனின் தன்மை.

ஒரு நாள் சுற்றுலா சென்ற போது அவன் ஒருவன் மட்டும் சென்ற சிறு படகு கவிழ்ந்து விட்டது. கடல் நீரினால் அடித்து செல்லபட்ட அவன் யாருமே இல்லாத தீவு ஒன்றில் கரை ஒதுங்கினான்.

திகைத்துப் போனாலும், தன்னை காப்பாற்ற யாரேனும் வருவார்கள் என்ற நம்பிக்கையோடு காத்திருந்தான். அந்த பக்கமாக செல்லும் பெரிய கப்பல்களுக்கு சமிக்ஞை செய்ய தன்னிடம் இருந்த கைக்குட்டையை கொடியாக கட்டி வைத்தான்.

ஆனால் இரண்டு மாதங்கள் சென்ற பின்பும் அவனை காப்பாற்ற ஒருவரும் வரவில்லை.

அவனின் நம்பிக்கை குறைந்தாலும் அந்த தீவில் வாழ தன்னால் இயன்ற அளவில் முயன்றான்.

அங்கே இருக்கும் வன விலங்குகளிடம் இருந்து தன்னைக் காப்பாற்றிக் கொள்ள சிறு குடிசை ஒன்றை கட்டிக் கொண்டான். அங்கே கிடைத்த சிறு சிறு உணவுப் பொருட்களை தேடி கண்டுபிடித்து எடுத்து உண்டு பசியாறினான்.

ஒருநாள் அதே போல் அவன் உணவு தேடி விட்டு திரும்பிய போது அவன் மிகவும் கஷ்டப்பட்டு கட்டி இருந்த அந்த குடிசை மொத்தமாக எரிந்து சாம்பலாகி இருப்பதைப் பார்த்து திகைத்து போனான். குடிசை இருந்த இடத்தில புகை மட்டுமே வந்துக் கொண்டிருந்தது.

அவ்வளவு தான் அவனுக்குக் கோபம் பொங்கியது! விரக்தி மேலோங்கியது.

கோபத்துடன் கத்தினான்! நல்லது செய்த அவனுக்கு எல்லாமே தீங்காகவே நடப்பதாக அழுது புலம்பினான்...!

அப்போது ஒரு பெரிய கப்பல் ஒன்று அவன் இருந்த தீவின் திசையில் வருவதை கண்டான். கைகளை வேகமாக அசைத்து அவன் கத்த, அந்த கப்பல் மெல்ல அந்த தீவின் அருகே இருந்த கரையோரம் வந்து நின்றது. அவனால் நம்பவே முடியவில்லை!

கப்பலில் இருந்து இறங்கி வந்த மாலுமியிடம் எப்படி அந்த தீவிற்கு வந்தீர்கள் என ஆவலுடன் கேட்டான்.

"எங்கள் கப்பல் தலைவன் எங்கிருந்தோ புகை வருவதை கவனித்து என்ன என்று தன்னுடைய தொலைநோக்கியில் பார்த்த போது நீங்கள் நட்டிருந்த உதவி கேட்கும் கொடி அவர் கண்ணில் பட்டது.

யாரோ உதவி கேட்கிறார்கள் என்பதைப் புரிந்து கொண்டு இந்தப் பக்கம் கப்பலை திருப்பி வந்தோம். என்றான் அந்த மாலுமி!

வாழ்வில் நாம் சவால்கள், பிரச்சினைகள் என எத்தனை எத்தனையோ எதிர் கொள்ள வேண்டி இருக்கலாம். சில சமயம் நாம் நம் வாழ்வின் மோசமான நேரம் என்று நினைப்பது கூட நன்மைக்காகவும் இருக்கலாம்.

எல்லாவற்றையும் இழந்து நிற்கும் நிலைமையிலும் நம்பிக்கை யோடு இருந்தால் கட்டாயம் ஏதேனும் பாதை தெரியும்.

இரவு நீண்டாலும் விடியல் தோன்றத்தான் செய்யும்!

நம்பிக்கை தான் வாழ்க்கை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உலகில் தன் கடமையைச் செய்பவன் எவனும், அதனிடம் ஒரு பொழுதும் அதிருப்தி கொள்வதில்லை.
- யாரோ

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## விடுமுறை நாட்களில் விழாக்களை நடத்துங்கள்

மாவட்டச் செயலாளராக இருந்த ஸ்ரீகாந்தா அவர்கள் தவத்திரு யோகர் சுவாமிகள் மீது மிகுந்த பக்தி கொண்டவர். அவ்வாறே சுவாமிகளும் அவர் மீது மதிப்பு வைத்திருந்தார்.

ஒருமுறை அவர் சிங்கள அதிகாரி ஒருவரை அழைத்துக்கொண்டு யோகர் சுவாமிகளிடம் சென்றார்.

சுவாமிகளிடம் சிங்கள அதிகாரியை அறிமுகப்படுத்தினார்.

யோகர் சுவாமிகள் எப்போதும் யதார்த்தமாகச் சிந்திப்பவர். தவறுகளைச் செய்பவர்களைக் கண்டபாட்டில் ஏசித் துரத்துபவர்.

அப்பேற்பட்ட சுவாமிகளுக்கு அரசாங்க அதிபர் ஸ்ரீகாந்தாவின் அச்செயலில் திருப்தி ஏற்படவில்லை.

உடனே சுவாமிகள்; ஸ்ரீகாந்தாவைப் பார்த்து உங்களைச் சந்திப்பதற்கு எத்தனையோ பேர் அலுவலகங்களில் காத்திருக்கிறார்கள்.

ஆனால் நீங்கள் அவரை (சிங்கள அதிகாரி) அழைத்து வந்து சாமி காட்டுகிறீர்கள். போய் உங்கள் கடமையைச் செய்யுங்கள் என்றார் சுவாமிகள்.

தவத்திரு யோகர் சுவாமிகளுடன் தொடர்புபட்ட மேற்போந்த கதையை ரிஷி தொண்டுநாத சுவாமிகள் கூறியபோது, எம் கன்னத்தின் ஓரங்கள் நனைந்துகொண்டன.

ஞானத்துறவியாக வாழ்ந்த தவத்திரு யோகர் சுவாமிகள் நல்லூர் முருகனைத் தஞ்ச மெனச் சரணடைந்தவர்.

**பஞ்சம் படை வந்தாலும் பாரெல்லாம் வெந் தாலும் அஞ்சுவமோ நாங்களடி கிளியே ஆறு முகன் தஞ்சமடி** எனப் பாடிப் பரவிய யோகர் சுவாமிகளின் சிந்தனை முழுவதும் ஏழை மக்களுக்கு உதவ வேண்டும் என்பதுதான்.

அதனாலேயே உங்களைச் சந்திப்பதற்காகக் காத்திருக்கின்ற பொதுமக்களைச் சந்திக்குமாறும் முதலில் கடமையைத் தவறாது செய்யுமாறும் தவத்திரு யோகர் சுவாமிகள் ஸ்ரீகாந்தாவுக்கு அறிவுரை கூறினார்.

உண்மையில் சுவாமிகள் கூறிய அறிவுரை ஸ்ரீகாந்தாவுக்கு மட்டுமானதல்ல. மாறாக அஃது அத்தனை அதிகாரிகளுக்குமானது.

ஆம், பொதுவில் அலுவலகங்களில் உயர் அதிகாரிகளைச் சந்திப்பதற்குப் பொதுமக்கள் நீண்டநேரம் காத்திருக்கின்ற துர்ப்பாக்கிய நிலைமை இன்னமும் தொடர்கிறது.

இந்த நிலை மாற்றப்பட வேண்டும். அதிலும் பொது நிகழ்வுகளிலும் கலைநிகழ்வுகளிலும் அரச உயர் அதிகாரிகள் விருந்தினர்களாகக் கலந்து கொள்ளும்போது, அதனால் பொது மக்களுடன் தமது நேரத்தைச் செலவிட முடியாத நிலைமை ஏற்படுகிறது.

எனவே ஆளுநர், அமைச்சின் செயலாளர்கள், அரச அதிபர்கள், பிரதேச செயலர்கள் உள்ளிட்ட உயர்நிலை அதிகாரிகள் பொது நிகழ்வுகளில் விருந்தினர்களாகப் பங்கேற்பதாக இருந்தால், அந்த நிகழ்வுகள் விடுமுறை நாட்களில் நடைபெறுவதாக இருக்க வேண்டும்.

இதை மிகவும் இறுக்கமாகப் பின்பற்றும் போது, தவத்திரு யோகர் சுவாமிகளின் சிந்தனை – அறிவுரை நடைமுறைப்படுவதுடன் அதன்மூலம் பொதுமக்கள் தமது பிரச்சினையை இலகுவாகத் தீர்க்கவும் முடியும்.

ஆகவே இனிவரும் காலங்களில் லீவு நாட்களில் பொதுநிகழ்வுகள் நடைபெற வேண்டும் என்பதை எம் தமிழர் தாயகத்தில் அமுலுக்குக் கொண்டுவர வேண்டும்.

# மருதானைப் பொலிஸ் நிலையத்தில் உயிரிழந்த தமிழ்ப் பெண்கைதி கொலை செய்யப்பட்டாரா?

## பொலிஸாரின் முரண்பட்ட கருத்துக்களால் வெடித்தது சர்ச்சை
## உரிய தீர்வு பெற்றுத் தருவதாக உறுதியளித்த ஆனந்த விஜேபால

(கொழும்பு)

கிளிநொச்சி திருவையாறு பகுதியைச் சேர்ந்த 32 வயதுடைய இரு பிள்ளைகளின் தாயான தமிழ்ப் பெண் ஒருவர், கொழும்பு மருதானைப் பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைக்கப்பட்டிருந்தபோது மரணித்த சம்பவம் பெரும் சர்ச்சையை ஏற்படுத்தியுள்ளது.

இப் பெண் தான் அணிந்திருந்த உடையைக் கழற்றி தற்கொலை செய்ததாகப் பொலிஸார் தெரிவித்துள்ளதோடு, அவர் சட்டவிரோத செயல்களில் ஈடுபட்டதாகவும், கஞ்சா வைத்திருந்ததாகவும் குற்றம் சாட்டப்பட்டுள்ளது.

இந்த மரணம் தொடர்பாக சந்தேகங்கள் எழுந்துள்ள நிலையில் பொலிஸாரின் விளக்கங்கள் முற்றிலும் எதிர்மறையானது என பல தரப்பினரும் விமர்சிக்கின்றனர். 24 மணி நேரமும் இயங்கும் மருதானைப் பொலிஸ் நிலையத்தில் முன்னணிப் பகுதியில் தடுத்து வைக்கப்பட்ட பெண் எவ்வாறு தற்கொலை செய்து கொண்டார் என்பதில் பல கேள்விகள் எழுந்துள்ளன.

இச்சம்பவம் தொடர்பாக பாராளுமன்ற உறுப்பினர் சிறீதரன் நேற்று (23) பாராளுமன்றத்தில் கருத்துத் தெரிவிக்கும் போது, பெண்ணின் மரணம் தொடர்பாக சந்தேகம் இருப்பதாகத் தெரிவித்து உண்மையைக் கண்டறியுமாறு அதிகாரிகளைக் கோரியுள்ளார்.

இதற்குப் பதிலளித்த பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் ஆனந்த விஜேபால,

பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைக்கப்பட்ட ஒருவரால் தற்கொலை செய்வது எவ்வாறு சாத்தியமாகும் என்று கேள்வி எழுப்பியதோடு, இது கொலையாக இருக்கலாம் எனவும், சம்பவம் தொடர்பாக சரியான விசாரணை மேற்கொள்ளப்பட்டு அப் பெண்ணுக்கு உரிய நீதி கிடைக்க ஆவன செய்யப்படும் எனத் தெரிவித்துள்ளார். (ம-7)

# ஆட்சி மாறினாலும் பொலிஸாரின் மனநிலையில் மாற்றமில்லை

## கஜேந்திரகுமார் எம்.பி ஆதங்கம்

(கொழும்பு)

மருதானைப் பொலிஸ் நிலையத்தில் தமிழ்ப் பெண்ணொருவர் உயிரிழந்துள்ள சம்பவம் ஆட்சிமாற்றம் ஏற்பட்டாலும் 70 ஆண்டுகளாகத் தமிழர்களிற்கு எதிரான ஒடுக்குமுறையில் ஈடுபட்ட பொலிஸாரது மன நிலையில் எவ்வித மாற்றமும் ஏற்படவில்லை என்பதை வெளிப்படுத்துகின்றது எனத் தமிழ்தேசிய மக்கள் முன்னணியின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது,

இந்த மரணம் பொலிஸாரின் தடுப்புக் காவலில் இருந்தபொழுது நடைபெற்றதால் பொலிஸாரே இவரது மரணத்திற்கான முழுப்பொறுப்பையும் ஏற்றுக்கொள்ள வேண்டும்

நாட்டின் தலைநகரிலுள்ள 24 மணி நேரமும் தீவிரமான செயற்பாட்டில் இருக்கக்கூடியதெனக் கருதப்படுகின்ற சர்வதேச சமூகத்தினரும் வெளிநாட்டுச் சுற்றுலாப் பயணிகளும் அதிகம் நடமாடுகின்ற பகுதியிலுள்ள பொலிஸ் நிலையம் ஒன்றில் இப்பெண் தற்கொலை செய்து கொண்டார் என்பது சந்தேகத்தினை ஏற்படுத்துகின்றது.

ஆட்சி மாற்றம் நடைபெற்றாலும் 70 ஆண்டுகளாகத் தமிழர்களுக்கு எதிரான ஒடுக்குமுறையில் ஈடுபட்ட பொலிஸாரது மனநிலையில் எவ்வித மாற்றமும் ஏற்படவில்லை என்பதனை இச்சம்பவத்தின் பின்னணிகள் தொடர்பில் வெளிவரும் தகவல்கள் தெரியப்படுத்துகின்றன என்றார். (ம-7)

# அதிக விலைக்கு அரிசி விற்பனை

## தடுக்கக் களமிறங்கியது நுகர்வோர் விவகார அதிகார சபை

(கொழும்பு)

அதிக விலைக்கு அரிசி விற்பனை செய்யும் வியாபாரிகளைக் கண்டறிய, நுகர்வோர் விவகார அதிகார சபை நாட்டின் அனைத்து மாவட்டங்களிலும் தொடர்ச்சியான சோதனைகளை மேற்கொண்டு வருகிறது.

சட்டம் கடுமையாக அமுல்படுத்தப்பட்டு இரவில் கூட சிறப்புப் பரிசோதனைகள் மேற்கொள்ளப்படுகின்றன.

அந்த வகையில் அதிக விலைக்கு அரிசி விற்பனை செய்யும் வர்த்தகர்களைக் கண்டறிய நுகர்வோர் விவகார அதிகார சபை நேற்றுக் கொழும்பு மாவட்டத்தில் சிறப்புச் சோதனையை நடத்தியது.

புறக்கோட்டையில் மொத்த விற்பனையாளர்கள் மற்றும் இறக்குமதியாளர்களை ஆய்வு செய்ய ஆறு சிறப்புக் குழுக்கள் நியமிக்கப்பட்டன.

மேலும் [illegible] நுகேகொடை, வெள்ளவத்தை, தெஹிவளை, ரத்மலானை, மொரட்டுவ, பத்தரமுல்ல, கொஹுவல, பொரலஸ்கமுவ, கொலன்னாவ, வெல்லம்பிட்டிய, கடுவெல, ஹன்வெல்ல, அவிசாவெல்ல, பாதுக்க மற்றும் கொடகம ஆகிய நகரங்களில் உள்ள மொத்த மற்றும் சில்லறை விற்பனைக் கடைகளிலும் சோதனைகள் மேற்கொள்ளப்பட்டன.

இதன்போது அதிக விலைக்கு அரிசி விற்பனை செய்த 20க்கும் மேற்பட்ட வியாபாரிகளுக்கு எதிராகச் சட்ட நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

அதே நேரத்தில் அரிசியை மறைத்து வைத்திருந்த ஒரு வியாபாரியையும் மற்றும் காலாவதியான அரிசியை சேமித்து வைத்திருந்த ஒரு கடையையும் அதிகாரிகள் குறித்த சோதனையின் போது இனங்கண்டனர். (ம-7)

# தேங்காய்த் தட்டுப்பாட்டுக்கு தேங்காய்ச் சம்பலே காரணம்

## பிரதி அமைச்சர் சதுரங்கவின் கருத்துக்கு வலுக்கும் எதிர்ப்பு

(கொழும்பு)

தேங்காய்த் தட்டுப்பாட்டிற்கு தேங்காய்ச் சம்பல் செய்வது மற்றும் தேங்காய் பால் பிழிதல் போன்ற செயல்முறை ஒரு காரணமாகக் கூறப்படலாம் என்று பிரதி அமைச்சர் சதுரங்க அபேசிங்க நேற்று முன்தினம் தெரிவித்திருந்தார்.

இதற்குப் பதிலளிக்கும் வகையில் உணவக உரிமையாளர்கள் சங்கத்தின் தலைவரும், நுகர்வோர் உரிமைகளைப் பாதுகாப்பதற்கான தேசிய இயக்கத்தின் தலைவருமான அசேல சம்பத் நேற்றுக்காலை செய்தியாளர் சந்திப்பொன்றை ஏற்பாடு செய்திருந்தார்.

அங்கு தேங்காய்ச்சம்பல் அல்லது தேங்காய் பிழிதல் செயல்முறைதான் நாட்டில் தேங்காய்ப் பிரச்சினைக்கு காரணம் என்று பிரதி அமைச்சர் சதுரங்க அபேசிங்க கூறியதை கடுமையாக விமர்சித்த அசேல சம்பத், பிரதி அமைச்சரின் தந்தை நிஹால் அபேசிங்க ஒரு சிறப்பு மருத்துவர் என்பதால் தேங்காய்ச் சம்பலின் மருத்துவக் குணங்களைப் பற்றி மகனுக்குக் கற்றுக்கொடுப்பது முக்கியம் என்றார்.

இதற்கிடையில் பிரதி அமைச்சரின் கூற்றுக்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் விதமாக தேங்காய் விற்பனை செய்யும் சில கடைகளின் உரிமையாளர்கள், தேங்காய்ச் சம்பல் மற்றும் தேங்காய்ப் பாலுக்குத் தேங்காய்களை விற்கமாட்டோம் என்று தேங்காய்களுக்கு அருகில் ஒரு பலகையை வைத்துள்ளமையை அவதானிக்க முடிந்தது. (ம-7)

# மின்சாரம் தாக்கி சிறுவன் உயிரிழப்பு

ஹ௫ரிகஸ் வெவ பொலிஸ் பிரிவிற்குட்பட்ட சுதர்சனாகம பகுதியில் நேற்று முன்தினம் காலை மரம் வெட்டும்போது மின்சாரம் தாக்கி 14 வயதுச் சிறுவனொருவன் உயிரிழந்தான்.

குறித்த சிறுவன் தனது வீட்டிற்கு அருகில் இருந்த பலாமரத்தின் கிளைகளை வெட்டிக் கொண்டிருந்தபோது, பலாமரத்தின் கிளை அருகிலுள்ள மின் கம்பியில் மோதியதில், சிறுவன் மீது மின்சாரம் பாய்ந்து மரத்தில் இருந்து விழுந்து உயிரிழந்துள்ளதாகத் தெரியவந்துள்ளது.

சிறுவனின் மரணம் தொடர்பாக அருகிலுள்ள வீட்டில் வசிக்கும் 62 வயதுடைய பெண் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார். (ம-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# நடக்கவிருக்கும் உள்ளூராட்சி சபைத்தேர்தலில் போட்டியிட இருக்கும் இளம் சமூகத்தினருக்கான தெளிவூட்டல் - பகுதி – II

06

கலாநிதி க. தவலிங்கம்
ஓய்வுநிலை நில அளவையாளர் நாயகம், தவிசாளர் - எல்லை நிர்ணய ஆணைக்குழு.

இத் தேர்தலில் அகில இலங்கை தமிழ்க் காங்கிரஸ் (TC), இலங்கைத் தமிழ் அரசுக் கட்சி (ITAK), ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சி (EPDP), ஐக்கிய தேசியக் கட்சி (UNP), தமிழர் விடுதலைக் கூட்டணி (TULF), ஸ்ரீலங்கா பொது ஜன பெரமுன (SLPP) மற்றும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி (SLFP) ஆகியன போட்டியிட்டன.

வலிகாமம் தெற்கு பிரதேச சபைத் தேர்தல் – 2018
கட்சிகள் பெற்ற உறுப்பினர்கள் எண்ணிக்கை

| | |
|---|---|
| உள்ளூராட்சி சபை | வலிகாமம் தெற்கு பிரதேச சபை |
| வட்டாரங்களின் எண்ணிக்கை | தனி- 18 பல் – 0 |
| வட்டார உறுப்பினர்கள் எண்ணிக்கை | 18 |
| சபைக்குரிய மொத்த உறுப்பினர்கள் | 30 |

| அங்கீகரிக்கப்பட்ட அரசியற் கட்சி அல்லது சுயேச்சைக் குழு | பெற்றுக் கொண்ட வாக்குகளின் எண்ணிக்கை | சதவீதம் | பெற்றுக் கொண்ட வாக்குகளின் எண்ணிக்கைக்கு உரிய உறுப்பினர்கள் எண்ணிக்கை | வட்டாரங்களில் இருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்கள் எண்ணிக்கை | மேலதிக பட்டியலில் இருந்து நியமிக்கப்பட வேண்டிய உறுப்பினர்கள் எண்ணிக்கை | மேன்மிகை உறுப்பினர்கள் எண்ணிக்கை (Over Hang)* |
|---|---|---|---|---|---|---|
| இலங்கைத் தமிழ் அரசுக் கட்சி | 8,963 | 35.77% | 11 | 11 | - | - |
| அகில இலங்கை தமிழ்க் காங்கிரஸ் | 5,401 | 21.55% | 6 | 3 | 3 | - |
| ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சி | 3,295 | 13.15% | 4 | 1 | 3 | - |
| ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி | 2,990 | 11.93% | 4 | 1 | 3 | - |
| ஐக்கிய தேசியக் கட்சி | 2,775 | 11.07% | 3 | 2 | 1 | - |
| தமிழர் விடுதலைக் கூட்டணி | 1,447 | 5.77% | 2 | - | 2 | - |
| ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுன | 188 | 0.75% | - | - | - | - |
| மொத்தம் | 25,059 | 100% | 30 | 18 | 12 | - |

| | |
|---|---|
| செல்லுபடியான மொத்த வாக்குகளின் எண்ணிக்கை | 25,059 |
| நிராகரிக்கப்பட்ட வாக்குகளின் எண்ணிக்கை | 405 |
| அளிக்கப்பட்ட மொத்த வாக்குகளின் எண்ணிக்கை | 25,464 |
| பதிவுசெய்யப்பட்ட வாக்குகளின் எண்ணிக்கை | 37,086 |

வலிகாமம் தெற்கு பிரதேச சபைத் தேர்தல் – 2018

| வட்டார இலக்கம் | வட்டார பெயர் | உள்ளடக்கப் பிரதேசம் (கிராம அலுவலர் பிரிவுகள்) | வெற்றி பெற்ற கட்சி | பெற்ற வாக்குகள் |
|---|---|---|---|---|
| 1 | ஏழாலை வடகிழக்கு | J 204ன் பகுதி, J205 | ITAK | 705 |
| 2 | ஏழாலை மேற்கு | J 201, J 202ன் பகுதி | TC | 494 |
| 3 | ஏழாலை மத்திய | J 203ன் பகுதி, J 204ன் பகுதி, J 206 | TC | 499 |
| 4 | குப்பிளான் | J 210, J 211 | TC | 314 |
| 5 | புன்னாலைக்கட்டுவன் | J 207, J 208, J 209 | EPDP | 747 |
| 6 | ஏழாலை தெற்கு | J 203ன் பகுதி | ITAK | 481 |
| 7 | சுன்னாகம் கிழக்கு | J 195, J 197, J 202ன் பகுதி | ITAK | 593 |
| 8 | சுன்னாகம் மேற்கு | J 198, J 199 | UNP | 529 |
| 9 | கந்தரோடை | J 186ன் பகுதி, J 200 | ITAK | 608 |
| 10 | சங்குவேலி | J 187 | ITAK | 572 |
| 11 | உடுவில் வடக்கு | J 185, J 186ன் பகுதி | SLFP | 523 |
| 12 | சுன்னாகம் தெற்கு | J 196 | ITAK | 357 |
| 13 | இணுவில் கிழக்கு | J 189, J 190 | ITAK | 497 |
| 14 | உடுவில் தெற்கு | J 182, J 184ன் பகுதி | ITAK | 543 |
| 15 | உடுவில் தென்கிழக்கு | J 183, J 184ன் பகுதி | ITAK | 731 |
| 16 | இணுவில் மேற்கு | J 188, J191 | UNP | 588 |
| 17 | தாவடி வடக்கு | J 193, J194 | ITAK | 579 |
| 18 | தாவடி தெற்கு | J192 | ITAK | 366 |

## 13.வலிகாமம் கிழக்கு பிரதேச சபை

வலிகாமம் கிழக்கு பிரதேச சபையில் மொத்தமாக 31 கிராம அலுவலர் பிரிவுகளின் பிரதேசங்கள் உள்ளடக்கப்பட்டுள்ளன. இப் பிரதேச சபை 22 வட்டாரங்களாகப் பிரிக்கப்பட்டுள்ளதோடு அவை எல்லாம் தனி உறுப்பினர் வட்டாரங்களாகும். வட்டாரங்களிலிருந்து தெரிவு செய்யப்படும் உறுப்பினர்கள் எண்ணிக்கை - 22 ஆகும்.

வலிகாமம் கிழக்கு பிரதேச சபையின் விஸ்தீரணம் கிட்டத்தட்ட 102.84 சதுர கிலோமீற்றர்கள் ஆகும். 2020ஆம் ஆண்டுச் சனத்தொகை கிட்டத்தட்ட 77922 பேர். 2018ஆம் ஆண்டு பிரதேச சபைத் தேர்தலுக்கு பதிவு செய்யப்பட்ட வாக்காளர் எண்ணிக்கை 52517 ஆகும்.

இத் தேர்தலில் அகில இலங்கை தமிழ்க் காங்கிரஸ் (TC), இலங்கைத் தமிழ் அரசுக் கட்சி (ITAK), ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சி (EPDP), ஐக்கிய தேசியக் கட்சி (UNP), தமிழர் விடுதலைக் கூட்டணி (TULF), சுயேட்சை குழு (IND) மற்றும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி (SLFP) ஆகியன போட்டியிட்டன.

வலிகாமம் கிழக்கு பிரதேச சபைத் தேர்தல் – 2018
கட்சிகள் பெற்ற உறுப்பினர்கள் எண்ணிக்கை

| | |
|---|---|
| உள்ளூராட்சி சபை | வலிகாமம் கிழக்கு பிரதேச சபை |
| வட்டாரங்களின் எண்ணிக்கை | தனி- 22 பல் – 0 |
| வட்டார உறுப்பினர்கள் எண்ணிக்கை | 22 |
| சபைக்குரிய மொத்த உறுப்பினர்கள் | 38 (மேன்மிகை உறுப்பினர்கள் உட்பட) |

| அங்கீகரிக்கப்பட்ட அரசியற் கட்சி அல்லது சுயேச்சைக் குழு | பெற்றுக் கொண்ட வாக்குகளின் எண்ணிக்கை | சதவீதம் | பெற்றுக் கொண்ட வாக்குகளின் எண்ணிக்கைக்கு உரிய உறுப்பினர்கள் எண்ணிக்கை | வட்டாரங்களில் இருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்கள் எண்ணிக்கை | மேலதிக பட்டியலில் இருந்து நியமிக்கப்பட வேண்டிய உறுப்பினர்கள் எண்ணிக்கை | மேன்மிகை உறுப்பினர்கள் எண்ணிக்கை (Over Hang)* |
|---|---|---|---|---|---|---|
| இலங்கைத் தமிழ் அரசுக் கட்சி | 12,300 | 35.09% | 13 | 15 | - | 2 |
| ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சி | 6,366 | 18.16% | 6 | 2 | 4 | - |
| அகில இலங்கை தமிழ்க் காங்கிரஸ் | 5,649 | 16.12% | 6 | 3 | 3 | - |
| சுயேச்சைக் குழு | 3,858 | 11.01% | 4 | 2 | 2 | - |
| தமிழர் விடுதலைக் கூட்டணி | 3,294 | 9.40% | 3 | - | 3 | - |
| ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி | 2,703 | 7.71% | 3 | - | 3 | - |
| ஐக்கிய தேசியக் கட்சி | 884 | 2.52% | 1 | - | 1 | - |
| மொத்தம் | 35,054 | 100% | 36 | 22 | 16 | 2 |

| | |
|---|---|
| செல்லுபடியான மொத்த வாக்குகளின் எண்ணிக்கை | 35,054 |
| நிராகரிக்கப்பட்ட வாக்குகளின் எண்ணிக்கை | 749 |
| அளிக்கப்பட்ட மொத்த வாக்குகளின் எண்ணிக்கை | 35,803 |
| பதிவுசெய்யப்பட்ட வாக்குகளின் எண்ணிக்கை | 52,517 |

வலிகாமம் கிழக்கு பிரதேச சபைத் தேர்தல் – 2018

| வட்டார இலக்கம் | வட்டார பெயர் | உள்ளடக்கப் பிரதேசம் (கிராம அலுவலர் பிரிவுகள்) | வெற்றி பெற்ற கட்சி | பெற்ற வாக்குகள் |
|---|---|---|---|---|
| 1 | வலளாய் | J 282, J 283, J 284 | ITAK | 687 |
| 2 | பத்தமேனி | J 281, J 285 | IND | 493 |
| 3 | அச்சுவேலி மேற்கு | J 275, J 287 | ITAK | 634 |
| 4 | அச்சுவேலி தெற்கு | J 286 | ITAK | 760 |
| 5 | ஆவரங்கால் | J 276, J 277 | ITAK | 918 |
| 6 | வாதரவத்தை | J 280 | ITAK | 378 |
| 7 | புத்தூர் கிழக்கு | J 278 | ITAK | 600 |
| 8 | புத்தூர் மேற்கு | J 273, J 274 | IND | 1438 |
| 9 | சிறுப்பிட்டி | J 271, J 272 | ITAK | 813 |
| 10 | அச்செழு | J 279 | ITAK | 531 |
| 11 | ஊரெழு | J 267 | EPDP | 547 |
| 12 | உரும்பிராய் வடக்கு | J 264 | ITAK | 515 |
| 13 | உரும்பிராய் கிழக்கு | J 266 | ITAK | 346 |
| 14 | நீர்வேலி | J 268, J 270 | ITAK | 696 |
| 15 | நீர்வேலி வடக்கு | J 269 | ITAK | 517 |
| 16 | கோப்பாய் வடக்கு | J 262 | TC | 498 |
| 17 | உரும்பிராய் தெற்கு | J 265 | ITAK | 482 |
| 18 | உரும்பிராய் மேற்கு | J 263 | ITAK | 316 |
| 19 | கோப்பாய் மத்திய | J 261 | EPDP | 623 |
| 20 | கோப்பாய் தெற்கு | J 260 | TC | 529 |
| 21 | கல்வியன்காடு | J 259 | TC | 368 |
| 22 | இருபாலை | J 257, J 258 | ITAK | 1241 |

## 14.வடமராட்சி தென்மேற்கு பிரதேச சபை

வடமராட்சி தென்மேற்கு பிரதேச சபையில் மொத்தமாக 35 கிராம அலுவலர் பிரிவுகளின் பிரதேசங்கள் உள்ளடக்கப்பட்டுள்ளன. இதில் J 355 கிராம அலுவலர் பிரிவின் ஒரு பகுதி வல்வெட்டித்துறை நகர சபைக்குள் அடங்கும்.

இப் பிரதேச சபை 19 வட்டாரங்களாகப் பிரிக்கப்பட்டுள்ளதோடு அவை எல்லாம் தனி உறுப்பினர் வட்டாரங்களாகும். வட்டாரங்களிலிருந்து தெரிவு செய்யப்படும் உறுப்பினர்கள் எண்ணிக்கை - 19 ஆகும்.

வடமராட்சி தென்மேற்கு பிரதேச சபையின் விஸ்தீரணம் கிட்டத்தட்ட 82.22 சதுர கிலோமீற்றர்கள் ஆகும். 2020ஆம் ஆண்டுச் சனத்தொகை கிட்டத்தட்ட 48181 பேர். 2018ஆம் ஆண்டு பிரதேச சபைத்தேர்தலுக்கு பதிவு செய்யப்பட்ட வாக்காளர் எண்ணிக்கை 35047 ஆகும்.

இத் தேர்தலில் அகில இலங்கை தமிழ்க் காங்கிரஸ் (TC), இலங்கைத் தமிழ் அரசுக் கட்சி (ITAK), ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சி (EPDP), ஐக்கிய தேசியக் கட்சி (UNP), தமிழர் விடுதலைக் கூட்டணி (TULF), ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன (SLPP) மற்றும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி (SLFP) ஆகியன போட்டியிட்டன.

(தொடரும்...)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆவரங்காலில்...

உயிரிழந்தவராவார்.

நேற்று முன்தினம் மாலை பருத் தித்துறை வீதியில் யாழில் இருந்து பருத்தித்துறை நோக்கி மோட்டார் சைக்கிளில் பயணித்த இளைஞன், வீதியில் மாடுகளைக் கூட்டி (சாய்த்து) சென்ற இளைஞனுடன் மோதி விபத் துக்கு உள்ளாகியுள்ளார்.

விபத்தில் மோட்டார் சைக்கிளில் பயணித்த இளைஞனும் மாடுகளை சாய்த்து சென்ற இளைஞனும் படுகாய மடைந்த நிலையில், வீதியில் சென்ற வர்கள் இருவரையும் மீட்டு வைத்திய சாலையில் அனுமதித்தனர்.

அந்நிலையில் மாடுகளைச் சாய்த்துச் சென்ற இளைஞன் வைத்தியசாலை யில் சிகிச்சை பலனின்றி உயிரிழந் துள்ளார். மோட்டார் சைக்கிள் ஓட்டி யான இளைஞன் தொடர்ந்தும் அவ சர சிகிச்சைப் பிரிவில் சிகிச்சை பெற்று வருகின்றார். (ம-7,33)

## பாதுகாப்பு...

யில் இருந்த பாதுகாப்பு உத்தியோகத் தரை அங்கு மதுபோதையில் சிவில் உடையில் வந்த பொலிஸ் உத்தி யோகத்தர் காயம் ஏற்படும் வகையில் தாக்கியுள்ளார்.

இவ்விடயம் தொடர்பில் யாழ். போதனா வைத்தியசாலையின் பிரதிப் பணிப்பாளர் மருத்துவர் சி.யமுனா னந்தாவிடம் முறையிட்டதை அடுத்து, அவரினால் யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாட்டைப் பதிவு செய்ததுடன் தாக்குதலை மேற் கொண்ட பொலிஸ் உத்தியோகத்தர் மீது நடவடிக்கை எடுக்க வேண்டும் எனக் கோரிக்கை விடுத்திருந்ததுடன் இவ்வாறான நடவடிக்கைகளைக் கட்டுப்படுத்தாவிடின் வைத்திய சாலையினை நிர்வகிப்பதில் பல சிக் கல்களை எதிர்நோக்க நேரிடும் என வும் அவர் யாழ்ப்பாணப் பொலிஸா ரிடம் தெரிவித்தார். (ம-7)

## திட்டமிட்ட...

கைத் தமிழரசுக்கட்சியின் பாராளு மன்றக் குழுத்தலைவர் சிவஞானம் சிறிதரன் மற்றும் ஜனநாயக தமிழ்த் தேசியக் கூட்டணியின் பாராளுமன்றக் குழுத்தலைவர் செல்வம் அடைக்கல நாதன் ஆகியோருக்கு இடையிலான சந்திப்பொன்று இம்மாதத் தொடக்கத் தில் பாராளுமன்றக் கட்டடத்தொகுதி யில் நடைபெற்றது.

இச்சந்திப்பின்போது அரசாங்கத் தினால் புதிய அரசியலமைப்பு உரு வாக்கப்பணிகள் ஆரம்பிக்கப்படும் போது தமிழர்களுக்கான அரசியல் தீர்வு குறித்துத் தமிழ்த் தேசியக் கட்சி கள் ஒன்றிணைந்து பொதுவான தொரு தீர்வுத்திட்டத்தை முன்மொழி வது குறித்து நாளை சனிக்கிழமை இலங்கைத் தமிழரசுக் கட்சி, ஜன நாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணி மற் றும் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி ஆகிய கட்சிகளின் பிரதிநிதிகள் சந்தித்துக் கலந்துரையாடுவது எனத் தீர்மானிக்கப்பட்டிருந்தது.

இருப்பினும் கடந்த சனிக்கிழமை நடைபெற்ற இலங்கைத் தமிழரசுக் கட்சியின் மத்திய செயற்குழுக்கூட்டத் தின்போது, தமிழர்களுக்கான தீர்வுத் திட்டம் குறித்து ஆராய்வதற்கும், அத னைத் தொடர்ந்து தமிழ்த் தேசியப் பரப்பில் உள்ள ஏனைய கட்சியினரு டன் பேச்சுவார்த்தைகளில் ஈடுபடு வதற்குமென கட்சியின் பதில் தலை வர் சி.வி.கே.சிவஞானம் தலைமை யில் 7 பேர் கொண்ட குழுவொன்று நியமிக்கப்பட்டது.

இவ்வாறானதொரு பின்னணியில் நேற்று முன்தினம் புதன்கிழமை பாராளுமன்றத்தில் கஜேந்திரகுமார் பொன்னம்பலத்தை சந்தித்து உரை யாடிய சிறிதரன், தமது கட்சியின் உள்ளகத் தீர்மானத்துக்கு அமைய எதிர்வரும் 25ஆம் திகதி நடத்துவ தற்குத் தீர்மானிக்கப்பட்ட சந்திப்பில் தாமல் கலந்து கொள்ளமுடியாது என அறிவித்தார்.

அதனையடுத்து ஏற்கெனவே ஜன நாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணியின் பாராளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதனால் கோரப்பட்டி ருந்ததற்கு அமைய எதிர்வரும் 25 ஆம் திகதி நடத்த உத்தேசிக்கப்பட் டிருந்த சந்திப்பு 27 ஆம் திகதிக்குப் பிற்போடப்பட்டிருப்பதாகவும், அன் றைய தினம் மாலை 4.00 மணிக்கு தமது கட்சியும், ஜனநாயக தமிழ்த் தேசியக் கூட்டணியின் பிரதிநிதிகளும் யாழ்ப்பாணத்தில் சந்தித்துக் கலந் துரையாடவிருப்பதாகவும் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலை வர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தெரிவித்தார். (ம-7)

## கிளிநொச்சியை...

வவுனியா ஓமந்தை ஏ9 வீதியில் நேற்று வியாழக்கிழமை காலை பத்து மணியளவில் மோட்டார் சைக்கிளில் பயணித்த இரு பெண்களைத் தொடர்ந்து வந்த இளைஞர் இருவர் குறித்த பெண்களை வழிமறித்து பெண்களைத் தாக்கியதுடன் அவர்களி டம் இருந்த ரூபாய் 7 இலட்சம் பெறு மதியான கைடைக்கத்தொலைபேசியை யும் பறிமுதல் செய்துள்ளனர்.

பாதிக்கப்பட்ட பெண்கள் உடனடி யாக வன்னி பிராந்திய பிரதிப் பொலிஸ்மா அதிபரின் அவசர இலக்க மான 107ற்குத் தொடர்பு கொண்டு முறையிட்டதை அடுத்து உடனடி யாகச் செயற்பட்ட ஓமந்தைப் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி சிரேஷ்ட பொலிஸ் பரிசோதகர் ஜெயத்திலக்க தலைமையிலான பொலிஸ் குழு வினர் குறித்த இளைஞர்களை அடை யாளம் கண்டு ஓமந்தை சேமமடுப் பகுதியில் துரத் திப்பிடித்துள்ள னர்.

கைது செய்யப் பட்ட இருவரும் கிளிநொச்சிப் பகு தியைச் சேர்ந்த 29 வயதுடையவர் கள் என பொலி ஸார் தெரிவித் துள்ளதுடன் மேலதிக விசா ரணைகளின் பின்னர் கைது செய்தவர்களை நீதிமன்றில் முன் னிலைப்படுத்த வுள்ளனர். (ம-7)

## கல்வி...

நேற்று பாராளு மன்ற அமர்வில் கலந்து கொண்டு பிரதமர் இந்த விடயம் தொடர் பில் கருத்துத் தெரிவித்தார்.

முன்னைய அரசாங்கத்தால் முன்வைக்கப்பட்ட கல்வி சீர்திருத்த திட்டங்களில் நேர் மறையான மாற் றங்களைச் செய்ய எதிர்பார்ப்பதாக வும் பிரதமர் குறிப் பிட்டார்.

தற்போதுள்ள கல்வி முறையை மாணவர் சமூகத் திற்கு மிகவும் பொருத்தமான வகையில் மாற்று வதன் மூலம் கல்வி சீர்திருத் தங்கள் செயற்ப டுத்தப்படும்என்று பிரதமர் தெரிவித் தார்.

அழகியல், தகவல் தொழில் நுட்பம் மற்றும் கணக்கியல் போன்ற பாடங் களின் உள்ளடக் கத்தை மிகவும் விரிவுபடுத்த மாற்ற தாம் விரும்புவதாகவும் அந்தப் பாடங்களை ஒருபோதும் நீக்க எதிர் பார்க்கவில்லை என்றும் பிரதமர் கூறினார்.

கல்வியில் போட்டித்தன்மையைக் குறைக்கும் நோக்கில் 2026ஆம் ஆண்டு முதல் கல்விச் சீர்திருத்தங் கள் செயற்படுத்தப்படவுள்ளதாகவும், பரீட்சை முறை மற்றும் பாடத்திட்டத் தைத் திருத்தம் செய்வதற்கும் நட வடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக பிரதமர் தெரிவித்தார். (ம-7)

## யாழ்.இந்து...

பிரசோதன் முதலாம் இடத்தைப் பெற்றுள்ளார்.

இதேவேளை யாழ்.பொஸ்கோ வித்தியாலய மாணவன் செல்வன் ராகவன் அக்சத் 185 புள்ளிகளைப் பெற்று யாழ். மாவட்டத்தில் இரண்டாம் இடத்தைப் பெற்றுள்ளார். (ம-7)


மஹஜன சம்பத
திகதி 2025.01.23
சீட்டிழுப்பு இலக்கம் 5725
Z 5 1 7 1 9 2
அத சம்பத Z 7 1 9 2
சீட்டிழுப்பு இலக்கம் 300
National Lotteries Board

தன நிதானய
திகதி - 2025.01.23
சீட்டிழுப்பு இலக்கம் - 1755
N 16 44 55 57 N
63977

மெகா பவர்
திகதி 23/01/2025
சீட்டிழுப்பு இலக்கம் 2073
U 01 18 40 51 60

லக்கி 7 VIP
திகதி 2025.01.23
சீட்டிழுப்பு இலக்கம் 551
V 1 2 6 8 7 4 V

கொவிசெத
சீட்டிழுப்பு இலக்கம் 3967
சீட்டிழுப்பு திகதி 23.01.2025
U 02 23 66 67
U
தேசிய லொத்தர் சபை

HANDAHANA
உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு திகதி 2025.01.23
சீட்டிழுப்பு இலக்கம் 1034
மிதுனம் 14 16 27 28 மிதுனம்
40574 08

உத்தியோகபூர்வ முடிவுகள்
சுபிரி வாசனா
23.01.2025 வெற்றி வாரம் 433
A 8 8 5 0 8 8
58188
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.29,696,225.20

SUPER BALL
சீட்டிழுப்பு வாரம் 2699
சீட்டிழுப்பு திகதி 2025.01.23 தினம் வியாழக்கிழமை
10 31 35 39 X
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 81,685,964.00

சனிதா
திகதி 23.01.2025 வெற்றி வாரம் 4860
21 31 45 55 X
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 50,822,489.60
71140

சசிரி
606
23.01.2025 வியாழக்கிழமை
03 19 46
ரூ.200,000.00

ராசி
சீட்டிழுப்பு வாரம் 4411
சீட்டிழுப்பு திகதி 23.01.2025 தினம் வியாழக்கிழமை
21 34 38 62 துலாம்
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.6,444,438.00
192982

ஜயக
M 02 16 20 52 75
1875
23.01.2025 வியாழக்கிழமை
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.562,852,646.40

அத கோடிபதி ADA KOTIPATHI
வியாழக்கிழமை
வெற்றி வாரம்: 2525
சீட்டிழுப்பு திகதி: 2025.01.23
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.65,280,020.00
13 26 47 70 J
354910
DLB


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# இளங்கலைஞர் மன்றம், நல்லூர்

புலம்பெயர் உறவுகள் மற்றும் கலைஞர்களின் ஆதரவுடன்
புனரமைக்கப்பட்ட புதிய கட்டடத் திறப்பு விழாவும் இசை விழாவும்

## அழைப்பு

(25.01.2025 - 27.01.2025)



முதலாம் நாள் நிகழ்வுகள் :

**காலம் - 25.01.2025 சனிக்கிழமை**
**நேரம் - காலை 9.00 மணி**
**இடம் - மன்ற கலா மண்டபம் - நல்லூர்**

தலைமை : **கௌரவ சி.வி.கே சிவஞானம் அவர்கள்**
அவைத் தலைவர், வடமாகாணசபை, தலைவர் இளங்கலைஞர் மன்றம்.

பிரதம விருந்தினர் : **கௌரவ நாகலிங்கம் வேதநாயகன் அவர்கள்**
ஆளுநர், வடமாகாணம்

சிறப்பு விருந்தினர் : **ஸ்ரீமான் சாயிமுரளி அவர்கள்**
இந்திய துணைத்தூதுவர் யாழ்ப்பாணம்

கௌரவ விருந்தினர்கள் : செஞ்சொற்செல்வர்
**கலாநிதி ஆறு. திருமுருகன் அவர்கள்**
(தலைவர் சிவபூமி அறக்கட்டளை, துர்க்காதேவி தேவஸ்தானம் தெல்லிப்பளை, காப்பாளர் இளங்கலைஞர் மன்றம்)
**இசைவாணர் மு. கண்ணன் அவர்கள்**
(ஈழத்தின் சிரேஷ்ட இசையமைப்பாளர்)



விசேட விருந்தினர்கள் : **திரு. திருமதி செல்வராசா சவுந்தராதேவி அவர்கள்** (அபிராமி Catering - கனடா)
**திருவாளர் தங்கராசா ரூபன் அவர்கள்**
தொழிலதிபர் - கனடா
**திரு. ச. துவாரகன்** கட்டட நிபுணர் SRT Const.

நிறுவுனர் சிறப்புரை : **இன்னிசை வேந்தர். பொன். சுந்தரலிங்கம் அவர்கள்**

இந்த மூன்று நாள் நிகழ்வுகளில் ஈழத்தின் புகழ்மிக்க கலைஞர்களும் இந்திய பிரபல்யமிக்க பெருங் கலைஞர்கள் மற்றும் புலம்பெயர் எம் கலைஞர்களும் இணைந்து வழங்கும் சிறப்புக் கலை நிகழ்வுகளும் நடைபெறும். அனைவரும் பார்த்து மகிழுங்கள்.

**இளங்கலைஞர் மன்றம், நல்லூர்**

(3203)


# இந்த வருடத்தில் 340,000 பேருக்கு வெளிநாட்டில் வேலைவாய்ப்பு

(கொழும்பு)

இந்த ஆண்டு 340,000 இலங்கையர்களுக்கு வெளிநாட்டில் வேலை வாய்ப்புக்களைப் பெற்றுக்கொடுக்க எதிர்பார்ப்பதாக இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகம் தெரிவித்துள்ளது.

வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகத்தில் நேற்று நடைபெற்ற புதிதாக அனுமதிப்பத்திரம் பெற்ற வெளிநாட்டு வேலைவாய்ப்பு முகவர்களுக்கான விழிப்புணர்வு நிகழ்ச்சியில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகத்தின் தலைவர் கோசல விக்கிரமசிங்க இதனைத் தெரிவித்தார்.

2024 ஆம் ஆண்டில் 311,000 பேருக்கு வெளிநாட்டு வேலைவாய்ப்பு வழங்கப்பட்டது. மேலும் இந்த ஆண்டு இந்த எண்ணிக்கையை 12% அதிகரிக்க வெளிநாட்டு வேலை வாய்ப்புப் பணியகம் திட்டங்களை வகுத்துள்ளது.

அதன்படி விதிமுறைகளை முறையாக அமுல்படுத்தி, மக்களை வெளிநாடுகளுக்கு வேலைகளுக்காக அனுப்ப வேண்டும் என்றும் அதன் தலைவர் குறிப்பிட்டார்.

(ம-7)


Architecural CAD Centre
Reg. No:NAL/DS/1391-Jaffna
Personal & Group Classes
2D-Drawing & 3D Modeling
Auto CAD
Engineers
Architects
Surveyors
Draughtsmans
Drafting Students
Engineering Students
Technical College Students
NVQ 4 5 6
Lecture by:Mr.K.N.Mugunthan(D/A)
Cert.in Auto CAD Software(2d&3D)
University of Peradeniya
Cert.in Advance 3D Modeling in Auto CAD
University of Moratuwa
Link: 0775116320 0718617972
(C-2121)

## தேவை

O+ இரத்தத் தொகுதியைச் சேர்ந்த ஒருவருக்கு கல்லீரல் (Liver) தேவைப்படுகிறது. 40 வயதிற்கு உட்பட்டவர்கள் இதனை வழங்கலாம். தகுந்த சன்மானம் வழங்கப்படும்.
தொடர்புகளுக்கு :
077 036 6300, 021 224 2422
(774)


V2 VISA SERVICES
கனடா
077 77 20 322
077 77 19 322
Visit Visas
Air Tickets
• கனடா PASSPORT APPOINMENTS
விமான பயணச்சீட்டுக்கள்
• Student Visas • Online Appointments
• இந்தியா Visas • Online Visas - All countries
• Police Clearance • Travel Insurance
Sri lankan Visa Extention
வெளிநாட்டவருக்கான இலங்கை விசா நீடிப்பு
(C-2120)

PREGNANCY VOUCHER
கர்ப்பிணித் தாய்மாருக்கான Voucher இற்குரிய பொருட்களை இப்போது Happy Super market உரும்பிராயில் கொள்வனவு செய்யலாம் (வலிகாமம் கிழக்கு பிரதேச செயலகம் - கோப்பாய் பதிவுள்ளோர் மட்டும்)
Happy Super market - உரும்பிராய்
077 780 8030
(776)

# 31ம் நாள் அந்தியேட்டி அழைப்பும் நன்றி நவிலலும்

எம்மை நீங்காத் துயரில் ஆழ்த்தி விட்டு கடந்த 28.12.2024 அன்று இறைபதமடைந்த எமது குடும்பத் தலைவர்

## அமரர் வினாயகமூர்த்தி ஆனந்தமயில் (V.A.M)



தோற்றம்
27.06.1954

மறைவு
28.12.2024

அவர்களின் சிவபதப்பேறு குறித்த அந்தியேட்டிக் கிரியைகள் எதிர்வரும் 27.01.2025 திங்கட்கிழமை அதிகாலை 4.30 மணியளவில் திருநாவலூர் தெணியம்மன் கோவில் அந்தியேட்டி மடத்தில் நடைபெறும். அந் நிகழ்விலும் அதனைத் தொடர்ந்து எமது இல்லத்தில் மு.ப 11.30 மணியளவில் நடைபெறும் சபிண்டீகரண நிகழ்விலும், ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் மதிய போசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு தங்களை அன்புடன் அழைக்கின்றோம்.

மேலும் அன்னாரின் பிரிவுச் செய்தி அறிந்து நேரில் வந்தும் வெளிநாடுகளிலிருந்து தொலைபேசி ஊடாகவும் எமக்கு ஆறுதல் கூறியவர்களுக்கும் மற்றும் சமூக வலைத்தளம், துண்டுப்பிரசுரம். பனர்கள் மூலம் தமது அனுதாபங்களைப் பகிர்ந்தோருக்கும் இன்னும் பல வேறு வழிகளிலும் உதவிய அயலவர், உற்றார், உறவினர், நண்பர்கள் மற்றும் அனைவருக்கும் எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

குறிப்பு: தயவு செய்து இவ் அழைப்பினைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்று வருகை தருவதோடு 29.01.2025 புதன்கிழமை நண்பகல் 12.00 மணியளவில் நடைபெறும் மதியபோசனத்திலும் (அசைவம்) கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

(C-2117)

தம்பசிட்டி வீதி,
பருத்தித்துறை. (காணிக்கந்தோர் அருகாமை)

T.P.No : 077 307 7521

தகவல் :
குடும்பத்தினர்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை வலம்புரி நியூஸ் பேப்பர் (பிறைவேற்) லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் இல.191, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 24.01.2025 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.